


# அருவி

பொது நூலகம் - நகராட்சி மன்றம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி

(சஞ்சிகை)

வெளியீடு

பொது நூலகம்

நகராட்சி மன்றம் – திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருவி

(சஞ்சிகை)

மார்கழி – 2023

வெளியீடு

**பொது நூலகம்**

**நகராட்சி மன்றம் – திருகோணமலை**

அட்டைப்படம்

**ஓவியர் கே. சிறிதரன்**

சஞ்சிகை வடிவமைப்பு

**மு.ஷ.மு. மஸாஹிர்**

## மலர்க்குழு



ந. யோகேஸ்வரன்
பிரதம நூலகர்



மு.லெ. றிம்சானா
நூலகர்



அ. அச்சுதன்
நூலக உதவியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் ஒரு படிநிலையை நோக்கி
# நூலகம் உங்களுடன்!

திருகோணமலை நகரசபை பொது நூலகத்தினால் வெளியிடப்படும் "அருவி" எனும் இந்த இலக்கிய சஞ்சிகை உங்கள் கைகளில் தவழ்வதனையெண்ணி எமது நூலகம் பெருமை கொள்கிறது. திருகோணமலை எழுத்தாளர்களின் ஆக்கங்களை வெளிக்கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் இவ்விதழ் வளர விரும்புகின்றது.

ஒரு சஞ்சிகையின் இருப்பு அவை தாங்கி வருகின்ற கனதியான, காத்திரமான படைப்புக்களின் உட்கிடக்கைகளிலேயே தங்கியுள்ளது. எமது திருகோணமலை எழுத்தாளர்களின் படைப்புகளுடன் வளர்ந்து வரும் எழுத்தாளர்களின் ஆக்கங்களும் இதில் இடம்பெற வேண்டுமென்று உளமார விரும்புகின்றோம்.

சிறந்த ஒரு வாசக குழாமை உருவாக்கி திருகோணமலை பொது நூலகம் தொடர்ந்தும் பயணிக்க விரும்புகின்றது. அனைவரது ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

நன்றியுடன்
"மலர்க்குழு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியீட்டுரை

கலை, கலாசாரம், பண்பாடு என்பன சமூகத்தின் அடையாளமாகவும் மனித வாழ்வியலின் வாழ்வியலாகவும் இருந்து வருகின்றன. இவற்றிலிருந்து வெளிப்படும் மனித விழுமியங்கள் மனிதர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன எனும் நம்பிக்கையில் எமது திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகத்தினால் "அருவி" சிறப்பு மலர் வெளிவருகின்றது. நூலகர், நூலக உத்தியோகத்தர்களதும் மற்றும் பிரதேசப் படைப்பாளிகளினதும் அயராத முயற்சியினால் இம்மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

திருகோணமலையில் இவ்வாறான இலக்கிய முயற்சிகள் எதிர்கால சந்ததியினரின் வாழ்வியல் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு உதவும் என்ற நம்பிக்கையில் இப்பணியில் ஆக்கங்கள் வழங்கிய படைப்பாளிகளையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

**வெ. இராஜசேகர்**
செயலாளர்
நகராட்சி மன்றம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

திருமலையின் "அருவி" சஞ்சிகையின் வெளியீட்டிற்கு வாழ்த்துரையை வழங்குகின்ற பெருமிதத்தோடு கோணேசப் பெருமானை வேண்டுகின்றேன். இலங்கையின் முதன்மையான நூலகங்களில் ஒன்றான திருக்கோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமானது நகராட்சி மன்ற செயலாளர், நூலகர், நூலக உத்தியோகத்தர்கள் அதிலும் குறிப்பாக சஞ்சிகையின் வெளியீட்டினை பொறுப்பெடுத்து முன்னின்று உழைக்கும் திரு. அ. அச்சுதன், நூலக உதவியாளர் ஆகியோருக்கும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

தேனீக்கள் போல் ஒவ்வொரு விடயமாக தேடிப்பெற்று பல்துறை சஞ்சிகையாக திருமலையின் அருவி சஞ்சிகைக்கு ஆக்கங்களைச் சமர்ப்பித்திருக்கும் கவிஞர்கள், எழுத்தாளர்கள் அனைவரையும் இத்தருணத்தில் பாராட்டுவதோடு, திருமலையின் "அருவி" சஞ்சிகையானது எதிர்காலத்தில் பல்துறை அறிவுக்களஞ்சியமாகவும், சகல துறைகளுக்குமான அறிவுத்தேடலின் பொக்கிஷமாகவுள்ளது

மாணவர்கள், வாசகர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகளின் எழுச்சிமிகு அறிவுப் புரட்சிக்கு வித்திடும் ஞான தீபமாகவும், வாசகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் தேன் அமிர்தமாகவும் திகழ வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**எஸ். முரளிதரன்**
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை நூலகமும் நானும்...

நல்ல நூல்கள் நல்ல நண்பர்களுக்கு சமமானது என்பர் அறிஞர். வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான் என்பது உண்மையோ பொய்யோ வாசனைத் தேவதைகள் வரலாற்றை மாற்றி எழுதுகிறார்கள் என்பதற்கு சீனக்குடியரசின் தலைவர் மா.ஓ. சேதுங் ஒரு நல்ல உதாரணம்.

சீனப்புரட்சிக்கு வித்திட்ட தந்தை இவர். சீன நாட்டின் கலாச்சாரத்தை நூல் நிலையங்களால் மாற்றியமைத்தவர் மா.ஓ. பிரித்தானியர்கள் இந்நாட்டில் பொருத்தமான அரசியல் மாத்திரம் மாற்றங்களைக் கொண்டுவரவில்லை கல்வி கலாச்சாரத்துறையிலும் பல மாற்றங்கள் இவர்களிடமிருந்து தான் ஆரம்பிக்கிறது.

திருகோணமலை டொக்கியாட் கடற்படைத்தளம் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் படைத்தளமாக இருந்த காரணத்தினால் பிரித்தானியக் குடும்பத்தாருக்கும் படை அதிகாரிகளுக்கும் கற்றுக் கொள்வதற்காக 1835ம் ஆண்டு இலங்கையின் இரண்டாவது பொது நூலகமாக திருகோணமலை பெற்றா பொது நூலகம் ஸ்தாபிக்கப்பட்டது. 1946 ஆம் ஆண்டு இதை திருகோணமலை நகராட்சிமன்றம் பொறுப்பேற்றுக்கொண்டது.

நவீன நூலகமுறையென்பது முதல் முதல் பிரித்தானியர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதன் முதல் அமைப்பாக திருகோணமலையில் டொக்கியாட்டு படைத்தளத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் கடற்கடையை அண்டிய பகுதியில் இந்நூலகம் அமைக்கப்பட்டது.

பிரித்தானியருடைய கல்வி மற்றும் படைத்தளப் பாவனைக்காக அமைக்கபட்ட இந்நூலகத்தில் ஆரம்பகாலத்தில் ஆங்கில நூல்களின் ஆதிக்கமே செல்வாக்குப் பெற்றிருந்தது. சுதந்திரத்துக்குப் பின் குறிப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானிய சாம்பிராச்சியத்தின் கொடி 1956ம் ஆண்டு இறக்கப்பட்டு இலங்கையின் கொடி ஏற்றப்பட்டதோடு குறித்த நூலகத்தின் நிர்வாக மற்றும் நடவடிக்கைப் பொறுப்புகள் திருகோணமலை நகரசபையின் கைகளுக்கு பாரப்படுத்தப்பட்டது.

திருகோணமலை, பட்டணமும் சூழல் பகுதிகளில் தமிழ் குடிகளின் செறிவும் மிஷனரிமாரின் பாடசாலைகளும் அதிகமாக காணப்பட்ட நிலையில் தமிழ் நூல்கள் இந்திய சஞ்சிகைகள் ஆங்கில தமிழ் தினசரி நாளேடுகள் நூலகத்தில் சிறிது சிறிதாக மேலோங்கி வந்த நிலையில் தமிழ் வாசகர்கள் படிப்படியாக அதிகரித்துக் கொண்டார்கள்.

இந்நூலகத்தின முதலாவது நூலகராக முத்தையா நியமிக்கப்பட்டார். நூலகர்கள் சபாரட்ணம், நூலகர் ரோச் ரட்ணே, நூலகர் செல்வராஜா, நூலகர் தனபாலசிங்கம், நூலகர் க. வித்தியாசரன், நூலகர் செ. சிவபாதசுந்தரம் திருமதி கிரிந்திரன், வயலட் எதிரிசூரிய, சுகந்தி சதாசிவமூர்த்தி, கா. ராஜேஸ்வரசிங்கம், க.வரதகுமார், குணாளன், ந.குகனேசன் என்போர் நூலகர்களாக இருந்து பணியாற்றியுள்ளனர்.

1835ம் ஆண்டு முதல் சுமார் 110 ஆண்டுகள் கடற்கரை ஓரத்தில் சிறியதொரு கட்டிடத்தில் இயங்கி வந்த திருகோணமலை பொது நூலகமானது 1978ஆம் ஆண்டு நகரசபைக்கு அருகாமையிலுள்ள புதிய கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஒரு மாடி அமைப்பைக் கொண்ட இக்கடிடத்தை நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு செய்து உதவினார் பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்பந்தன்.

ஆரம்ப காலத்தில் திருகோணமலை நகரசபையானது தலைமை நூலகத்துடன் சில வட்டார வாசிக சாலைகளையும் இயங்கி வந்தது. அவ்வகையில் முத்துக்குமாரசுவாமி கோவிலடி, திருஞானசம்பந்தர் வீதி, உப்புவெளி, இலிங்கநகர், அன்புவழிபுரம் போன்ற இடங்களில் வட்டார வாசிகசாலைகளை நிறுவி பராமரித்து வந்த காரணத்தினால் வாசகர் வட்டம் பெருகிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989ம் ஆண்டு மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் காரணமாக வடகிழக்கு மாகாண சபை ஈ.பி.ஆர.எல்.எப். ஈ.என்.டி.எல்.எப். ரெலோ போன்ற அமைப்புக்கள் வசம் வடகிழக்கு மாகாண சபையின் ஆட்சிப்பொறுப்பு கையளிக்கப்பட்ட நிலையில் வடகிழக்கு மாகாண சபை அமர்வுகளுக்கான பாராளுமன்றமாக திருகோணமலை நகரசபை மண்டபம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் பொது நூலக கட்டிடம் மாகண சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக கையேற்கப்பட்ட நிலையில் நூலகத்துக்கு சொந்தமான பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் வாரி அள்ளப்பட்டு நெல்சன் படமாளிகையில் குவிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான நூல்கள் சின்னா பின்னப்படுத்தப்பட்டது. பெறுமதிமிக்க நூல்கள் தொலைக்கப்பட்டன.

இவ்வாறான தொரு சூழ்நிலையில் நூலகத்தை மீள்நிர்மாணம் செய்யும் நோக்கத்துடன் வாசகர் வட்டமொன்று உருவாக்கப்பட்டு நூலகத்தைப் புனரமைக்கும் முயற்சிகளில் ஈடுபடுத்தப்படும்போது உரிய கட்டிட வசதிகள் இல்லாமையினால் தற்காலிகமாக நெல்சன் படமாளிகையிலேயே நூலகம் இயக்கப்பட்டு வந்தது.

1990ஆம் ஆண்டு மாகாண சபை கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து. நகரசபைக்கு அருகிலுள்ள நூலக கட்டிடத்தில் நூலகம் மீள் நிர்மானம் செய்யப்பட்டது. இதன் பின் சிறுவர் பிரிவு வாசிப்பறை. இரவல் வழங்கும் பகுதி. உசாத்துணை பகுதி என பல்வேறு பகுதிகள் கொண்டதாக விரிவாக்கம் செய்யப்பட்டது.

உடன் உதவுப்பகுதியில் அல்லது உசாத்துணைப் பகுதியில் தமிழ். ஆங்கிலம் என்ற மொழிப் பிரிவு கொண்டதாய் பழந்தமிழ் இலக்கியம் தொடக்கம் புனைகதைகள். வரலாறு. விஞ்ஞானம். தொழில்நுட்பம். பூமி சாஸ்திரம். சமயம். தத்துவம். தொன்மை நூல்கள் என எட்டாயிரத்துக்கும் (8000) மேற்பட்டதுடன் திருகோணமலையின் வரலாற்று போக்கு சார்ந்த ஒரு அலகும் 1982 ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருமலை நவம்

1990ம் ஆண்டுக்குப்பின் புதிய செயல்முறையாக சகல பத்திரிகைகளும் மாதமுறையில் கட்டுப்படுத்தி தொகுத்து வைக்கப்பட்டுள்ளமை மிகச்சிறந்த உசாத்தன்மை கொண்டதாக பேணப்பட்டு வருகின்றது.

இன்று சுமார் 6000த்திற்கும் மேற்பட்ட நூலக அங்கத்தவர்கள் இணைக்கபட்டு அவர்களின் தொடர்வாசிப்புக்கு நூலகம் இரவல் கொடுக்கும் பகுதியை நடாத்திவருவது பாராட்டுக்குரிய விடயம்.

2000ஆம் ஆண்டுக்குப்பின் நகராண்மைக் கழகம் எடுத்த முயற்சியின் காரணமாக சபையின் பின்புறமாக இருக்கும் வெளிநிலைப்பகுதியில் நேக்கொட் (NECORD) நிறுவனத்தின் உதவியுடன் வசதிகள் பல கொண்ட நவீன நூலகமொன்று அமைக்கப்பட்டு 2009 யூன் 6ம் திகதி வாசிப்பறை (Reading Room) உசாத்துணைப் பகுதி (Reference), இரவல் கொடுக்கும் பகுதி (Lending), சிறுவர் பகுதி, விசேட பிரிவு, இலங்கை நூல் பகுதி மற்றும் திகோணமலை எழுத்தாளர்களின் படைப்பு பகுதி என வகைப்படுத்தப்பட்டு இயங்கப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ் ஆங்கிலம் சிங்கள மொழி வரை நூல்கள் என்ற வகையில் 40000 த்திற்கும் மேற்பட்ட நூல்களைக் கொண்ட 6000த்திற்கும் மேற்பட்ட அங்கத்துவத்தை தன் உறுப்பினராகக் கொண்டு தினந்தோறும் 200 - 300 இடைப்பட்ட பல்வேறு தர வாசகர் வருகை தரும் ஓர் புகழ்வாய்ந்த நூலகமாக இயங்கிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவணன் அன்பளித்த மான்களின் சந்ததிகள் திருகோணமலையில்...!

பாடல் பெற்ற திருகோணமலை திருக்கோணேஸ்வரம் அகில உலக சைவ மக்களின் இதயமாக விளங்கி வருகின்றது. இலங்கையின் கிழக்கே, கிழக்கு மாகாணத்தில் உலகப்பிரசித்தி பெற்ற இயற்கைத்துறைமுகம் அமைந்தமைக்கு சாதகமாயுள்ள மலைகளொன்றின் உச்சியில் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ளது. மூன்று மலைகளைக் கொண்டு முக்கோண வடிவில் அமைந்திருப்பதினால் திருக்கோணமலை என்று இந்நகரம் பெயர் பெற்றது.


இந்நகரத்தில் உலக பிரசித்தி பெற்ற திருத்தலம் திருக்கோணேஸ்வரம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே புனித ஷேத்திரமாக இருந்து வந்ததாகப் புராண இதிகாச வரலாறுகள் கூறுகின்றன. இந்தப் புனித திருத்தலமானது இலங்கையை ஆட்சி புரிந்த இராவணனின் கதையோடும் தொடர்பு பட்டதொன்றாகும்.

இலங்கை வேந்தன் இராவணன் இக்கோயிலுக்கு ஒரு சோடி மான்களை அன்பளிப்புச் செய்துள்ளான் என்றும், அவ்வாறு அன்பளிப்புச் செய்யப்பட்ட மான்களின் சந்ததிகள்தான் இன்றும் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறப்படும் மான்கள் திருகோணமலை பிரட்றிக் கோட்டையினுள்ளும், கோணேஸ்வரம் கோயிலுக்கு அருகிலும் வாழ்ந்தவை தற்பொழுது அருகி வருகின்றன என்பதை கண்டுகொள்கின்றோம்.

கோயில் வளாகம் மற்றும் கோட்டையை விட்டு கூடுதலான மான்கள் வெளியில் வந்துவிட்டன. திருகோணமலை நகரின் அடையாளமாக மான்கள் காணப்படுகின்றன. உள்ளூர், வெளியூர் சுற்றுலா பயணிகளை கவர்ந்த ஒரு சுற்றுலாத் தலமாக இன்று திருகோணமலை காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நிலையில் மான்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்புடன் சுற்றுலாத் துறையை ஊக்குவிக்கும் நோக்குடனும் கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைய மான்களை கணக்கெடுக்கும் செயற்பாடு திருகோணமலை நகரசபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. திருகோணமலை கடற்கரையை அண்மித்த பகுதியில் மான்களை பாதுகாக்கும் நோக்குடன் மான் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. மான்களுக்கு இயற்கை உணவை வழங்கும் நோக்குடன் அண்மையில் மான்களுக்கான உணவு விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை நகரசபை மான்களை பாதுகாக்கும் நோக்குடன் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இயற்கை படைத்த அழகான உயிரினங்களில் மான் இனம் தனித்துவமானது. திருகோணமலை நகரில் மான்கள் பரவலாகத் திரியும் பகுதிகளில் காணப்படும் பொலித்தீன் குப்பைகளை நகரசபை அகற்றிவருகின்றது. மான்களுக்கு நீர்த்தொட்டிகள் அமைத்து பராமரிக்கின்றமையும் முக்கியமானதாகும்.

இலங்கையில் திருகோணமலைப் பகுதியில் மாத்திரமே காணப்படும் இத்தகைய மான்களைப் பாதுகாப்பது திருகோணமலை வாழ் பொதுமக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

**அ. அச்சுதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்தோர் வாழ்வில் மகிழ்ச்சி காண்போம்

இன்றைய இயந்திர மயமான சூழலில் எமது வாழ்க்கையின் ஒவ்வொரு பொழுதுகளும் கனவேகமாக ஓடிக்கொண்டு இருக்கின்றது. அதற்கேற்றாற் போல மனவறுதியும் உடல் உறுதியும் கொண்டவர்களால் மட்டுமே இவ்வோட்டத்திற்கு ஈடுகொடுக்க முடிகிறது. அப்போ இளகிய மனம் கொண்டவர்கள் (மனவுறுதி குறைந்தவர்கள்), உடல் உறுதித்தன்மை குறைந்தவர்களின் நிலை என்ன? அவர்களும் மகிழ்ச்சியாக தமது அந்திக்காலம் வரை வாழத்தானே வேண்டும். அதுபற்றியே இக் கட்டுரை அலசுகின்றது.

மிகவும் கட்டுறுதியான உடம்பையும் ஆரோக்கியமான மனதையும் கொண்டு சிறுவயதிலிருந்து வளர்ந்து வருகின்ற ஒரு நபருக்கு வயது கூடிச்செல்கையில் முதுமை வர ஆரம்பிக்கின்றது. இதுவரை காலமும் தன்னைத் தவிர்த்து மனைவி, குழந்தைகள் என்று அதைச் சுற்றியே வாழ்ந்து பழக்கப்பட்டவருக்கு "தனது நிலை என்ன?" என்று சிந்திக்க ஆரம்பிக்கையில் வெள்ளம் அணை கடந்த நிலை போல ஆகிவிட்டிருக்கும். இதனால் பயன் ஏதும் இல்லை.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? நமது துணையை அதாவது மனைவியை இறுதி வரை கூடி வாழும் வாழ்க்கைக்கு தயார் படுத்த வேண்டும். அதாவது பொழுது போகாதிருக்கும் காலங்களில் இருவரும் சேர்ந்து கதைத்துக் கொண்டிருத்தல், நேரம் போனாலும் இவ் உரையாடல் சலிப்பில்லாமல் அமைய வேண்டும். இது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இருவரும் ஒரே எண்ணத்தில் செல்ல முடியாத வாழ்க்கை மாறிவரும் சூழலுக்கு ஏற்றாற் போல ஒருவர் அல்லது இருவருமோ ஓய்வில்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அமைந்து விடுதல், பேரக்குழந்தைகளின் பராமரிப்புக்காக தங்களது வாழ்க்கையை தியாகம் செய்தல் போன்ற பல இன்னோரன்ன காரணங்களால் கட்டுண்ட நிலையில் இருக்கும் ஒருவர் தன்னைப்பற்றி எண்ணுவதற்கு சந்தர்ப்பங்கள் அமைந்து விடுவதும் இல்லை. அதை வலிந்து ஏற்படுத்த மனம் இடம் கொடுப்பதும் இல்லை.



ஆக நாம் எமக்குரிய சந்தர்ப்பங்களை கடந்த காலங்களில் இழந்து விட்டோம். இப்போது முதுமை காரணமாக முன்னரைப்போல தைரியமாக எங்கும் செல்ல முடியாத நிலை. தனிமனித மகிழ்வுக்கான புறச்சூழல் அமையவில்லை. உரையாடுவதற்கு யாருமற்ற நிலை. ஏனெனில் முன்னர் நாம் ஓடியதைப் போலவே இப்போது எமது பிள்ளைகளும் உழைக்க வேண்டி ஓடிக்கொண்டே இருக்கின்றனர். ஆதலால் எம்மோடு உரையாடுவதற்கு அவர்களுக்கு நேரமில்லை. அதைச் சிலர் விரும்புவதுமில்லை. என்ன செய்வது? காலன் வந்து கைகொடுக்கும் வரை சிறைச்சாலை வாழ்க்கை தானா?

இவ்வாறு பல உள்ளங்கள் ஏங்குகின்றன. பலர் இவ்வகையான எண்ணங்களுடனேயே மறைந்து விடுகின்றனர். அவர்கள் எண்ணிய எண்ணங்களை கூட யாரிடமும் சொல்லிக் கூட இருக்க மாட்டார்கள். இன்று 50 வயதைக் கடந்தவர்கள் சற்று சிந்தியுங்கள். உங்களுடன் துணையாக வருபவர்கள் யார்? உடல் அயர்ந்து போகும் காலங்களில் மனைவிக்கு அடுத்ததாக துணை வருவது வாசிப்பதற்கேற்ற புத்தகங்களும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினசரி பத்திரிகைகளுமே. இவைகளுடன் மிக மகிழ்ச்சியாகவும் இளமை நினைவுகளுடனும் இருக்கும் இதே உலகத்தில் வலம் வரலாம். ஆகவே வாசிப்பினூடு ஒன்றிக் கலக்க முயற்சி செய்யின் அது வரமே.

ஆனாலும் அது அமையாத எமது மூத்தோர்களுக்காக இளையவர்களாகிய நாம் என்ன செய்யலாம்? அவ் வகையான வயதில் மூத்த பெரியோர்களுக்காக கிராமங்கள் தோறும் "மகிழ்வகங்கள்" அமைக்கலாம். இதில் பத்திரிகைகள், ஆன்மீக செயற்பாடுகள், தொலைக்காட்சி பார்க்கும் வசதிகள், பாட்டுப்பாடி ஆடி மகிழும் வசதிகள், பேசுகின்ற கூடங்களை அமைத்து அதிலே அவர்களின் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தி விடும்போது காலப்போக்கில் அவர்களின் மனம் அதிலே விருப்புக் கொண்டு மகிழ்ந்திருக்கும். இதே போல இவ் வளாகத்திலே நடைப்பயிற்சிக்கான பாதைகள், கண் கவர் பூந்தோட்டம் போன்றவற்றையும் சிறியளவில் ஏற்படுத்தலாம். அத்தோடு எமது வசதிற்கேற்ப சிறியளவான சத்துணவுகளையும் வழங்கி அவர்களின் வரவையும் உடல் தைரியத்தையும் ஊக்கப்படுத்தலாம்.

வீடுகளில் தனியே முடங்கிப்போயோ அல்லது உறவுகளால் வெறுத்து ஒதுக்கப்பட்டோ உள்ள முதியவர்களின் நெருங்கிய உறவுகளுடன் சிறந்த தொடர்புகளைப்பேணி அவர்களின் பகற்பொழுதுகள் ஒவ்வொன்றும் சிறப்பாய் மகிழ்வாக கழிய வகை செய்யலாம். " திக்கற்றவனுக்கு தெய்வமே துணை" என்னும் பழமொழிக்கேற்ப இச் செயல்களை தனிநபராகவோ, மன்றங்களுக் கூடாகவோ செய்து எம்முடைய நல்வாழ்வுக்காக தங்களை தியாகம் செய்த எம்மவர்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்கு வளம் சேர்ப்போமாக!



**மருத்துவர் அருமைநாதன் ஸதீஸ்குமார்**
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர(ண)ப் போராட்டம்

மிகவும் பழமையான வீடு,

60 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது, அந்த காலி இடம் வாங்கும்போது அந்த இடத்தில் ஒரு சிறிய மாமரம் இருந்தது,

அந்த வீட்டை கட்டிய தொழிலாளர்கள் அந்த மரத்தின் கீழ் அமர்ந்து தான் மதிய உணவு உண்பார்கள்.

அந்த வீட்டு முதலாளிக்கு அந்த மாமரத்தின் மீது தனி பாசம்,

அந்த மரத்தை போலவே அவரது வாழ்வும் குழந்தை குட்டியென சந்தோசமாக வளர்ந்தது. அவருக்கு இப்போது 90 வயது, மகன்களுக்கு திருமணம் ஆகி பின் பேரப்பிள்ளைகளுக்கும் திருமணம் ஆகி குழந்தைகளுடன் வெளிநாட்டில் வசிக்கிறார்கள்.

இந்த பாரம்பரிய வீட்டை இடித்து அதே இடத்தில் ஒரு மாடிவீடு Apartment கட்டி ஆளுக்கொரு flat எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற முடிவோடு ஒன்றுகூடி இருக்கிறார்கள்,

தாத்தாவும் ஒப்புதல் அளித்துவிட்டார்,

ஆனால் அந்த மரத்தை வெட்டவேண்டாம் என்று எவ்வளவோ போராடிப்பார்த்தார்,

ஆனால் யாரும் ஒப்புக்கொள்ளவில்லை,

வெளியில் இருந்து பார்க்கும் போது கோடிக்கணக்கில் செலவு செய்து கட்டிய வீடு எடுப்பாக இருக்காது இந்த மரமே மறைத்துவிடும் என்று முதல் வேலையாக மரத்தை வெட்டுவதென முடிவு செய்து, விலைபேச ஆட்களையும் வரச்சொல்லி விட்டார்கள்.

பொது நூலகம் - நகராட்சி மன்றம், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசல் புரசலாக விஷயம் தெரிந்துகொண்ட மாமரம் ஒரு நிமிடம் ஆடிப்போனது.

வேறெங்கோ வேலை முடித்துவிட்டு கத்தி கோடரியுடன் ஆட்கள் van ல் வந்து இறங்கினார்கள்.

தெருவில் இருந்த அத்தனை மரங்களும் ஒருவித பயத்துடனும் பதட்டத்துடனும் ஆடாமல் அசையாமல் அவர்களையே பார்த்துக்கொண்டு இருந்தது.

அவர்கள் தான் இவர்களின் எதிரி. அவர்கள் தெருவில் வந்தாலே இவர்களுக்கு நடுங்க ஆரம்பித்துவிடும்!

அவர்கள் நேராக மாமரத்து வீட்டிற்கு வந்து நிற்க எல்லா மரங்களுக்கும் புரிந்துவிட்டது !!

மாமரத்து நிழலில் உட்கார்ந்து டீ சாப்பிட்டபடி பேரம் பேசினார்கள்.

விலைபேசி முடித்ததும் எப்படி வெட்டலாம் என்று சுற்றிச்சுற்றி வந்து நோட்டமிட்டார்கள்.

தூரத்தில் இருந்து எல்லா மரங்களும் எட்டி எட்டி பார்க்க என்ன பேசுகிறார்கள் என்பது மட்டும் தெரியவில்லை.

ஆனால் மாமரம் மட்டும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு இருந்தது. கடைசியில் நாளை காலை வந்து வெட்டிவிடுகிறோம் என்று கூறிவிட்டு சென்றார்கள்.

மாமரத்திற்கு துக்கம் தாங்க முடியவில்லை. 60 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்தும் தாத்தாவைத்தவிர யாருக்கும் நம்மீது இரக்கமில்லையே என்ன மனிதர்கள் இவர்கள். உணர்ச்சியற்ற ஜடங்களாக இருந்துகொண்டு நம்மை மரம் என்கிறார்களே. உண்மையில் இவர்கள் தான் ஈரமற்ற மரக்கட்டைகள் என்று வேதனைப்பட்டது!

இரவு 8 மணி எல்லோரும் சந்தோஷமாக சாப்பிட்டுக்கொண்டு இருக்க தாத்தாவும் மாமரமும் மட்டும் எதையும் சாப்பிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தா மனக்கவலையோடு வெளியே வந்து மாமரத்தை தொட்டுப்பார்க்க அவரை கட்டிப்பிடித்து அழமுடியாதபடி மரமாய் பிறந்துவிட்டோமே என்று முதன் முதலாக வேதனைப்பட்டது மாமரம்!

அங்கிருந்த சாய் கதிரையில் உட்கார்ந்தபடி கவலைப்பட்டுக்கொண்டே தாத்தா உறங்கிவிட்டார்!!

ஆனால் மாமரத்திற்கு உறக்கம் வரவில்லை, நாளை காலை கத்தி கோடரி, ரம்பம் என்று விதவிதமான ஆயுதங்களோடு வருவார்கள், ஒரே அடியாக கழுத்தை வெட்டிவிட்டால் பரவாயில்லை, ஆனால் இவர்கள் கை, கால், தலை என ஒவ்வொரு உறுப்பாக வெட்டுவார்களே வலியை எப்படி தாங்கிக்கொள்ள போகிறோம்,

நம்மை நம்பி இந்த பறவைகள் வேறு கூடுகட்டி இருக்கிறது

பாவம் இரண்டு நாட்களுக்கு முன்புதான் எல்லாம் குஞ்சுபொரித்தது,

சென்ற மாதம் பின்புற வீட்டில் மரம் வெட்டும்போது இப்படித்தான் குஞ்சுகளெல்லாம் கீழே விழுந்து நசுங்கிபோய்விட்டது அதையே என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை இதை எப்படி தாங்கிக்கொள்ள போகிறேன்!? என்று பயந்துகொண்டேயிருந்தது.

நீண்ட நேரமாகியும் எந்தவொரு அசைவும் இல்லாமல் இருந்த மாமரத்தை பார்த்து பக்கத்து காம்பௌண்டில் இருந்த வேப்பமரத்திற்கு ஏதோ சந்தேகம் வந்து தன் கிளைகளை நீட்டி மாமரத்தோடு பின்னிக்கொண்டு எதாவது பிரச்சனையா என்று கேட்டது? (பொதுவாக மரங்கள், செடிகொடிகள் தங்களது உணர்வுகளை இப்படித்தான் பகிர்ந்துகொள்ளும் )

மாமரம் நடந்த எல்லாவற்றையும் கூற வேப்பமரம் மிகவும் வேதனைக்குள்ளானது, காரணம் இரண்டு மரங்களும் சிறுவயது முதல் ஒன்றாய் வளர்ந்தவை, தங்களுடைய சுகதுக்கங்களை பகிர்ந்து கொண்டவை நாளை காலை சாகப்போகும் நண்பனை எப்படியாவது காப்பாற்றவேண்டும் என்று வேப்பமரம் துடித்தது.

ஆனால் மாமரத்திற்கு தெரியும் தன்னுடைய இறப்பை யாராலும் தடுக்கமுடியாது என்று, அதனால் உன்னுடைய கிளைகள் மூலம் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறவைக்கூட்டை மட்டும் எப்படியாவது வாங்கிக்கொள் என்று வேப்பமரத்திடம் கேட்டது.

ஆனால் வேப்பமரம் மறுத்துவிட்டது.

உன்னுடைய இறப்பு இயற்கையான முறையில் இருந்தால் என்னால் தாங்கிக்கொள்ள முடியும்

இதுபோன்ற சுயநலம் மிக்க மனிதர்களால் கொல்லப்படுவாய் என்றால் எப்படி பொறுத்துக்கொள்ள முடியும்.

இது உனக்கும் இந்த குடும்பத்துக்குமான போராட்டம் மட்டும் கிடையாது.

உலகம் முழுவதும் நடந்துகொண்டிருக்கும் நன்றிகெட்ட தனத்தின் உச்சம்!

மனிதர்களுக்கு உதவுவதற்காக படைக்கப்பட்ட மரங்களை மனிதனே தன் சுயநலத்திற்காக அழித்துக்கொண்டு இருக்கிறான்!

அவன் சுயநலத்திற்கு நாம் ஏன் பலியாக வேண்டும். நம்முடைய சக்தி என்ன என்பதை அவர்களுக்கு உணர்த்தவேண்டும்!

என்று வேப்பமரம் ஆவேசப்பட.

நம்மால் என்ன செய்யமுடியும். பேசமுடியாது. நடக்க முடியாது. ஓடமுடியாது. நம் பிரச்சனையை புரியவைக்க முடியாது. பிறகு எப்படி மனிதர்களுக்கு உணர்த்தமுடியும்?!

நிச்சயம் முடியும்.

இந்த நிமிடம் முதல் நம்மைப்போன்ற எல்லா மரங்களும் மனிதர்களுக்கு தருகின்ற ஒத்துழைப்பையும். உதவியையும் நிறுத்தினால் நாளை காலை உன்னையும் உன்னைப்போன்று பாதிக்கப்படுபவர்களையும் சாவிலிருந்து காப்பாற்ற முடியும். நான் சொல்வதை மட்டும் செய் என்று வேப்பமரம் மாமரக்கிளைகளோடு பின்னிக்கொண்டு ரகசியமாக எதையோ சொல்லி அதை எல்லா மரங்களுக்கும். கிளைகள் மூலமாகவோ. வேர்கள் மூலமாகவோ சொல்லும்படி கூற. மாமரமும் வேப்பமரமும் தன் கிளைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேர்களும் எட்டும் தூரத்தில் இருக்கும் எல்லா மரம் செடிகொடிகளுக்கும் தகவலை சொல்ல, அவையெல்லாம் தன் பக்கத்தில் இருக்கும் மரங்களுக்கு தகவல்களை சொல்ல, இப்படி நாடுமுழுவதும் கிளைகள் மூலமாகவும் வேர்கள் மூலமாகவும் எல்லா மரம் செடிகொடிகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டது.

மாமரமும், வேப்பமரமும் பொழுது விடிவதற்காக காத்திருந்தது....

மெல்ல சூரியன் உதித்தது.

எல்லா இடங்களிலும் சராசரி அளவைவிட புகைமண்டலம் அதிகமாக இருந்தது.

எல்லா மக்களும் வழக்கமான நேரத்தைவிட கொஞ்சம் முன்பே எழுந்து தும்மியபடி வெளியே வந்தார்கள்.

சொல்லிவைத்தது போல் எல்லோருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

புகைமண்டலம் அதிகமாகிக்கொண்டே போனது. இருமியபடி மரத்தை வெட்ட ஆயுதங்களுடன் வந்திறங்கினார்கள்.

இரண்டு மரங்களும் வேதனையோடும் நம்பிக்கையோடும் அவர்களையே பார்த்துக்கொண்டு இருந்தன.

அவர்கள் மெல்ல மரத்தில் ஏறி கயிறுகட்ட ஆரம்பித்தார்கள். ..

அதற்குள் மூச்சுத்திணறல் அதிகமாகி மக்களெல்லாம் தெருவிற்கு ஓடிவர ஆரம்பித்தார்கள்.

வேப்பமரம் சொன்ன ரகசியம் இதுதான்.

இந்த நிமிடம் முதல் எல்லா மரங்களும் கார்பன் டை ஆக்சைடை சுவாசிக்காமல் ஆக்சிஜனை மட்டுமே சுவாசிக்கவேண்டும் மனிதர்களுக்கு தேவையான ஆக்சிஜனை வெளிவிட்டு, அவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் கார்பன் டை ஆக்சைடை நாம் உள்ளே இழுத்துக்கொள்வதால் தான் மனிதர்களால் உயிர்வாழ முடிகிறது.

நாம் ஏன் அவர்களை காப்பாற்ற வேண்டும்?!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது அவர்கள் நன்றியில்லாமல் நம்மை அழிக்க ஆரம்பித்துவிட்டார்களோ இனிமேல் அவர்களுக்கும் நமக்கும் எந்த உறவும் வேண்டாம். நாம் ஏன் விஷத்தன்மை கொண்ட கார்பன் டை ஆக்சைடை சுவாசிக்க வேண்டும்?!

அவர்களால் உருவாக்கப்பட்டது அவர்களே சுவாசித்துக்கொள்ளட்டும்!!

என்ற வேப்பமரத்தின் கருத்தை எல்லா மரங்களும் ஏற்றுக்கொண்டதன் விளைவே இந்த மூச்சுத்திணறல்!

மரத்தில் ஏறியவன் கயிறு கட்டமுடியால் போராடினான்! நானே காரணம் தெரியாமல் போராடிக்கொண்டிருக்க மரங்களெல்லாம் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், விலங்கினங்களுக்கும் மட்டும் ரகசியமாய் ஆக்சிஜன் கொடுத்துக்கொண்டு குளிராக வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தன!! மரத்தில் ஏறியவன் தடுமாறி கீழே விழுந்தான்.

பேரனும் குடும்பத்தினரும் மரத்தின் கீழ் வந்து இருந்தார்கள்!

குடும்பத்தினர் எல்லோரும் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்க

"என்ன மூச்சு முட்டுதா"? என்ற குரல் கேட்டு அங்கும் இங்கும் பார்க்க

நான்தான்டா மாமரம் பேசறேன்....

மரந்தானேன்னு கேவலப்படுத்துனீங்க இல்ல. இப்போ சாவுங்க.....

எங்களோட பெறுமதி என்னன்னு புரியவைக்கிறதுக்குதான் இந்த மரப்போராட்டம்!!

60 வருசமா

பரந்த நிழல்,

காய்கள், பழங்கள் குடுத்திருப்பேன்

நீங்கல்லாம் குழந்தையாயிருக்கும்போது என் கையில தான் ஊஞ்சல் கட்டி ஆடுவீங்க. எல்லாத்தையும் மறந்துட்டீங்க இல்ல?

நீங்கல்லாம் நல்லா வாழனும்னு தான் உங்களுக்கு உதவியா கடவுள் எங்களை படைச்சாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்து, மழை, காய்கறி, பழம், வீடு, படகு, நடைவண்டி, கைத்தடின்னு செத்து மண்ணா போறவரைக்கும் உங்ககூட தானே இருக்கோம்.

நீங்க மட்டும் ஏன் இப்படி நன்றிகெட்ட தனமா இருக்கீங்க?!

நீங்க ஆரோக்கியமா இருக்கிறதுக்காக முளைகட்டுன பயிருன்னு வாங்கி தின்றீங்க இல்ல, அதெல்லாம் எங்களோட பச்சைகுழந்தைங்க!

உங்க கிட்னி நல்லா இருக்கனுன்றதுக்காக தான் எங்கள வேரோட வெட்டிட்டு வந்து வாழைத்தண்டுன்னு விக்கிறாங்க! அப்போ எவ்ளோ வலிக்கும் தெரியுமா?!

எவ்ளோ ரத்தம் போகும் தெரியுமா?!

சிகப்பா இருந்தாதான் ரத்தமா?

வெள்ளையா இருந்தா ரத்தம் இல்லையா??

கரப்பான் பூச்சி, தேளுக்கு எல்லாம் ரத்தம் வெள்ளையாதான் அதுமாதிரிதான் இதுவும்!

இப்ப உனக்கு ஆமான்னு சொல்லனும்னா கூட நான் உயிரோட இருந்தாதான் முடியும்,

காப்பாத்து என எல்லோரும் கெஞ்ச,

மரங்கள் யாவும்

மரங்கள் இல்லை, மனிதர்கள் தான் மரக்கட்டைகள் என்பதை நிரூபிக்கும் விதமாக எல்லா மரங்களும் மனிதர்களை மன்னித்துவிட்டு,

விஷவாயுவை விழுங்கி ஆக்சிஜனை வெளியேற்ற

மனிதகுலம் மீண்டும் சுவாசிக்க தொடங்கியது

ஆனால் கொஞ்சம் நன்றியோடு!!

**மு.லெ. றிம்சானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் என்ன செய்யும்...?

வாசிப்பு மாதத்தை கடந்த சூழலில் வாசிப்பு பற்றிய ஆய்வு ரீதியான உசாவலொன்றை முன்னெடுப்பது சிறந்தது என்ற அவாவில் வாசிப்பு மாதத்தில் வாசித்த லீ குவான் யூ - பெருந்தலைவன் என்ற இந்த புத்தகத்தை முன்னிறுத்தி எனது கட்டுரையை கட்டமைக்க முயல்கிறேன்.

இந்த புத்தகத்தில், லீ கட்டியெழுப்பிய சிங்கப்பூர் என்ற கனவுலகிற்கு அடிப்படையாய் அமைந்தது அவரின் அரசியல் துறை பேராசிரியர் 'ஹெரால் லாஸ்கி' சொன்ன வாக்கியமாகும்.

"ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது அதன் பொருளாதாரம், இயற்கை வளம், மழையளவு என்பவற்றையும் விட அங்கிருக்கும் மக்களால் தான் தீர்மானிக்கப்படுகின்றது. கல்வி, தொழினுட்ப முன்னேற்றம் என்ற இரண்டும் செல்வ வளத்தை பெருக்கும் சக்திகள். முன்னேற விரும்புகிற எந்தவொரு நாடும் இன,மத,மொழி வேறுபாடின்றி எல்லாருக்கும் கல்வியிலும், தொழினுட்ப பயிற்சியிலும் சம வாய்ப்பளிக்க வேண்டியது அவசியம்" என்ற வாக்கியம் லீயின் மனதில் ஆழமாய் பதிந்தது..

சிங்கப்பூரை வளர்ச்சி கண்ட தேசமாக மாற்றிய லீ குவான் யூ, பல்கலைக்கழக மட்டத்தில் அரசியல் பாடத்தை கற்று மிகச்சிறந்த புள்ளிகளை மட்டுமில்லாது பிரயோக அறிவை பெற்றுக்கொண்டார். அந்த அறிவின் வாயிலாக வாழ்க்கை சதுரங்கத்தில் எந்த காயை எந்த கட்டத்திற்கு நகர்த்தினால் எத்தனையாவது நகர்த்தலில் வெற்றி கிடைக்கும் என்பதை துல்லியமாய் கணிக்க தொடங்கினார்.

உலகத்தை மாற்றுவதற்கு அறிவு தான் மிகச்சிறந்த ஆயுதம் என்ற ஆழமான புரிதலை கொண்ட சிங்கப்பூரை மாற்றுவதற்கு அரசியல் தான் வழி என்பதையும் புரிந்து கொண்டார். அதற்காக "அறிவின் வழிப்பட்ட அரசியல்" என்ற கருத்தியலை மனதில் நிறுத்தி தனக்கான அரசியல் பாதையை வகுக்க தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ரசிகரான லீ தனது மனைவியாக இலக்கிய இரசிகையான "க்வாஜியோக் சூ" என்ற பெண்ணை திருமணம் செய்த இடமும் அறிவின் பாற்பட்டது இலக்கியகர்த்தாவும், நாடக ஆசிரியருமான ஷேக்ஸ் பியர் பிறந்து வளர்ந்த 'ஸ்ட்ரான்போர்ட் ஆன் அவன்' என்ற இடத்தில் எந்தவித ஆடம்பரமுமின்றி இரகசிய திருமணம் செய்து கொண்டார்.

சிங்கப்பூர் திரும்பிய லீ கெங்ஸ்வீ, ராஜரத்தினம் (தமிழர்), சின்சை, கென்னி என்ற நான்கு நண்பர்களுடன் ஆலோசனை செய்த மக்கள் செயல் கட்சி என்ற அரசியல் கட்சியை தொடங்கி பல சீர்திருத்தங்கள் செய்து பொருளாதார மேம்பாட்டுடன் வாழ்வதற்கு சிறந்த நாடாக சிங்கப்பூரை கட்டி எழுப்பினார்.

புத்தகங்களும் அதன் வழியான கல்வி லீ என்ற தனிநபரின் வாழ்க்கையை மாற்றி அந்த தனிநபரின் சிந்தனை ஒரு தேசத்தையே மாற்றியது. அமைதியாக உறங்கி கிடக்கும் புத்தகங்கள் தட்டி எழுப்பியவுடன் களமாட தொடங்குகின்றன. சோம்பேறியை செயல் வீரனாகவும், முட்டாளை பேராசிரியராகவும் இந்த புத்தகங்கள் மாற்றுகின்றன.

தமிழர் தாயகத்தில் அனுஸ்டிக்கப்படும் ஹர்த்தால்கள், முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் மாத்திரம் தமிழர்களுக்கான மேம்பாட்டை, விடுதலையை, அபிவிருத்தியை பெற்றுக்கொடுக்குமா என்றால் இல்லை என்ற பெரும் விடையே எம்முண் நிற்கின்றது.

தனிநபர், சமூக, இன பொருளாதார மேம்பாட்டிற்கும், விடுதலைக்கும் புத்தகங்களே சிறந்த தீர்வுகளாகின்றன. இலக்கியம் எம்மை அதற்காக வழிநடாத்தக்கூடியன. வாசிப்பு குறைந்து விட்டது என வரட்டு வாதத்தை முன்வைக்க கூடியவர்கள் கூட வாசிக்காத நபர்களாகத்தான் இருக்கின்றன.

தகவல் தொழினுட்பத்தையும், ஊடகங்களையும், சமூக ஊடகங்களையும், தொலைபேசிகளை கண்டுபிடித்து எமக்கு விற்பவர்கள் கூட வாசிக்கிறார்கள். அதன் வழி புதிதாய் சிந்திக்கின்றார்கள் எமது நாட்டை சந்தையாக்குகின்றார்கள். எமது கண்ணில் படும் வெள்ளைக்காரர்கள் புத்தகங்களுடனே எம்மை கடந்து செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர்களின் கட்டை உடைகளை பார்த்து பல கதைகளை பேசும் நாங்கள், இவர்கள் ஏன் வாசிக்கிறார்கள் என்று சிந்திப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு கிரகிக்கும் ஆற்றல், உடன் முடிவெடுக்கும் திறன், சாமர்த்தியம், நபர்களுடன் கதைக்கும் தொடர்பாடல் திறன், எந்த சூழலையும் கையாளும் திறன், நினைத்ததை முடிக்கும் திறன், பிரச்சினைகளை கடக்கும் திறன், புத்திசாலித்தனம், மன அழுத்தத்தை குறைத்து மனதை இலகுவாக்கும் என பல சாதகமான அம்சங்களை இந்த வாசிப்பு தரும் உண்மையை சொல்லாமல், இதனை சொல்லக்கூடிய நல்ல புத்தகங்களை இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தாமல் "வாசிப்பு குறைந்து விட்டது" என்பதில் எவ்வித பயனுமில்லை என்பதை அனைத்து தோழர்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

"நூலகத்திற்கு வருகை தரும் எந்த பிள்ளையும் வாழ்க்கையில் தோற்ற வரலாறு இல்லை" வறுமையான குடும்பத்தில் பிறந்து மிகவும் துயரப்பட்ட என்னை கூட இந்த வாசிப்பு என்னையும் இன்று சமூகத்தில் அங்கீகாரமுள்ள மாற்றியிருக்கின்றது என்றால் உங்களை இந்த வாசிப்பு நிச்சயம் மேம்படுத்தும்.

காலத்தின் தேவை கருதி வாசிப்பு கலாசாரத்தை உருவாக்கும் பெரும் எண்ணத்துடன் ஒரு சிறு முயற்சியாக இந்த "வீடுகளுக்குள் முடங்கி கிடந்த திருகோணமலை மாவட்ட எழுத்தாளர்களின் நூல்களை" நகராட்சி மன்ற நூலகத்தின் வாசகர் வட்டம் திருகோணமலை புத்தக கண்காட்சியை முன்னெடுத்தமை முக்கிய அம்சமாகும்.

புத்தக கண்காட்சிகள், புத்தக வெளியீடுகள் என்பவற்றில் கலந்துகொண்டு உரைகளை செவிமடுத்தல், நாளாந்த பத்திரிகை, சஞ்சிகை வாசிப்பு, புத்தக வாசிப்பு என்பன ஒரு மனிதனை தேர்ந்த மனிதனாக மாற்றுகின்றன.

வாசிப்பினால் மேம்பட்ட லீயின் கனவு நனவாகிய சிங்கப்பூர் மண் போல எமது மண்ணும் மக்களும் மேம்பாடு அடைய வாசிப்பினால் மேம்பட்ட புதிய சமூகமொன்றை உருவாக்க உழைப்போம்.



**ச. திருச்செந்தூரன்**
தலைவர்
வாசகர் வட்டம்
பொது நூலகம் - நகராட்சி மன்றம்
திருகோமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையின் பாதையில் ஒரு மைல் கல்

தியாகராயா. காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு தேனீரையும் இடைக்கிடை குடித்துக்கொண்டு. பத்திரிகைகளிலும் கண்ணோட்டம் விட்டுக்கொண்டு. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் பார்த்து இரசித்து அலுத்து சோர்வும் நாரி உளைவும் ஏற்பட தன் தனியறையில் கட்டிலில் சாய்ந்தார். அவர் வாயில் சுருட்டுப் புகைந்து கொண்டிருந்தது. முன்பு உத்தியோகத்தில் இருக்கையில் சிகரட் தான் பிடிப்பார். இப்போது 'பென்ஸனீயராக' ஆனபின்னர் சுருட்டை தேர்தெடுத்து விட்டார். வருமானம் குறைந்ததால் மட்டுமில்லை. ஒரு சிகரெட் காசுக்கு ஒரு கட்டுச் சுருட்டே வாங்கலாம் என்பதாலுமில்லை. ஒரு பெட்டி வெண்சுருட்டில் இல்லாத மணம் குணம் காரம் சுகந்தம் ஒரு சுருட்டில் இருக்கிறது என்று அனுபவத்தில் புரிந்து கொண்டார்!

இவருக்கு எந்த நேரத்தில் என்ன வேணுமோ காலமறிந்து சேவை செய்ய அன்பு மனைவி இருக்கிறாள். இவரைக் கண்ணும் கருத்துமாகக் கவனிப்பதைத் தவிர அவவுக்கு வேறு வேலையே இல்லை! பிள்ளைகள் எல்லாம் ஆளொரு பக்கமாக பக்குவமாக கரை சேர்ந்து விட்டார்கள். இவரும் மனைவியும் நிம்மதியாய் சுகமாய் சீவிக்கிறார்கள்!....... தியாகராயா ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையில் நடத்துனராக (கொண்டக்டராக)த்தான் வேலையில் சேர்ந்தவர். தன் படிப்பால் திறமையால் முயற்சியால் படிப்படியாக முன்னேறி உயர் பதவிகளை வகித்து இறுதியாக விசாரணை அதிகாரியாக அமர்ந்தார்! செல்வமும் செல்வாக்கும் மதிப்பும் மரியாதையும் கிடைத்தே வந்தன. ஏன்றாலும் மின்விசிறி சுழல அமர்ந்தபடி அட்டகாசமாய் ஆட்சி செய்ததை விட. நடத்துனராக மக்களோடு பழகி அன்பை ஆதரவை பெற்று தொழில் செய்து பல காட்சிகளையும் அனுபவங்களையும் அனுபவித்த போது இருந்த சுகானுபவம் எப்போதுமே தனக்குக் கிடைக்கவில்லை என்றே தோன்றியது அவருக்கு!...... சுருட்டுப்புகை மண்டலத்தில் கடந்தகால நடத்துனர் தியாகராயாவின் காட்சிகள் படமாய் விரிந்தன....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கந்தளாய் சீனி ஆலை திருகோணமலை" என்ற பெயர் பலகை மும்மொழிகளில் தாங்கிய பேரூர்தி திருகோணமலை நகரிலிருந்து புறப்பட்டது கந்தளாயை நோக்கி. நகர்புறத்தை தாண்டு மட்டும் கொஞ்சம் நெருக்கடியாகவே இருக்கும். எப்போதும் தியாகராயாவுக்கு வாயும் கையும் ஓயாது! மும்மொழிகளிலும் சரளமாக பேசக் கற்றுக்கொண்டதால், பணிவும் கனிவும் பேச்சில் இருந்ததால் அவன் வேலை இலகுவாகியது மட்டுமல்ல, எல்லா இனத்தவரின் ஆதரவும் கை கூடியது!.... கந்தளாய் சீனி ஆலைக்கும் சீனி ஆலையிலிருந்து மறுபடி திருமலை நகருக்குமென்று அடிக்கடி குறுந்தூர சேவை செய்வதால், எல்லாரையும் இவருக்குத் தெரியும். இவரை எல்லாரும் அறிவர்... இந்தப் பாதையில் மூவினத்தாரும் வாழ்வதால், எல்லோருக்கும் ஏற்றவிதமாக கதைத்துப் பழகி சகலரின் சிநேகத்தைப் பெற்று வந்தார் என்றே சொல்ல வேண்டும்.

திருகோணமலை பேரூந்து நிலையத்திலிருந்து கந்தளாய் நிலையம் வரை சனங்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கும். நடத்துனரும் சாரதியும் சுறுசுறுப்பாகத்தான் இயங்கிக் கொண்டிருப்பர். கந்தளாய் வந்ததும் எல்லோரும் இறங்கி விடுவர்! இனி இங்கிருந்து சீனி ஆலைக்கு போகும். இனி சீனி ஆலைக்கு வேலை செய்யப் போகிறவர்கள் தான் வந்தேறுவர். அவர்களில் அநேகமானவர் பெண்களாகத்தான் இருப்பார்கள்! அதிலும் சிங்கள நங்கையராகத்தான் இருப்பார்கள்! இந்த ஊர்தியை எதிர்பார்த்தே காத்திருப்பர்.

தியாகராயா அப்போது கல்யாணமாகாத வாலிபன். இளமை அழகும் திடகாத்திரமும் உள்ளவன். எந்த மங்கையையும் கவரும் தோற்றம் மட்டுமல்ல, பேச்சும் பண்பும் கனிவும் நிரம்பவே இருக்கிறது! இனியென்ன மன்மதன் மலரம்போடு புறப்பட்ட மாதிரித்தான்!...

கந்தளாய் குளத்தை அண்டி சீனிஆலை பெரிதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மூலாதாரமான கரும்புத்தோட்டம் பெரும் எடுப்பில் செழித்தோங்கி வளர்த்து நிற்கிறது! அதை வளர்க்கவும் பராபரிக்கவும் ஏராளம் தொழிலாளிகள் பாடுபட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள்... இவையாவும் மேற்பார்வை செய்து இயக்கி செவ்வனே நடத்திச் செல்லவும் அலுவலர்கள் அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கான காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்க குடியிருப்புக்களும் அவர்களுக்காக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சீனி ஆலைக்குப் போவதற்காக குவியலாக வந்தேறும் நங்கையரெல்லாம் போவது முற்றிய கரும்புகளை எல்லாம் வெட்டித்தள்ளி கட்டுக்கட்டாக கட்டி பாரவண்டிகளில் ஏற்றிவிடத்தான்... அவர்களைப் பார்த்தால் கிழவருக்கும் ஆசைவரும்! சுமைத்துச் சமைத்து தாமே ருசி பார்த்து தின்று கொழுத்து தொப்பையும் வயிறுமான தளதளத்த உடம்பல்ல அவை. உழைத்து உழைத்து உரமேறி திரட்சியான் கட்டுதிட்டான உடல்வாகு கொண்ட கட்டழகிகள் அவர்கள்!....... வறுமைக் கோலமோ. வேலைக்கு இலாவகமாக இருக்கும் பொருட்டோ தெரியவில்லை அரைகுறை ஆடையோடு தான் காட்சியளிப்பர்!...... தொடைக்கு மேலாக ஒரு அழுக்கான துண்டை சுற்றிக் கட்டியிருப்பார். மார்புக்கச்சைபோல் ஒரு சட்டை! வேறு அலங்காரம் ஒன்றும் இருக்காது. காட்டு வாசிகள் போலிருந்தாலும் குனியும் போதும் நிமிரும் போதும் அசையும் போதும் குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் போதும் மறைந்திருந்த அங்கங்களும் வெளியே வந்து எட்டிப்பார்க்கும்! இத்தனை காலமும் இவ்வளவு கொள்ளை அழகை ஏன் தான் மறைத்து வைத்தனரோ என்று எண்ணத் தோன்றும்! வயோதிபனுக்கும் வாலிப எண்ணம் வந்து வளைத்துப்போடும்! பாதையில். தொழில் செய்யும் இந்த எழில் மாதரைத் தவிர வேறெவரும் காணப்படுவதில்லை! அப்படிக் காணப்பட்டாலும் அவர்களுக்கு விரச எண்ணம் தோன்றவே தோன்றாது. அம்மாதரின் ஒவ்வொருவரின் கரங்களிலும் கூரிய கொடுவாள் கத்தி இருந்து ஒளிவீசும்! ஒரே வெட்டில் எத்தனையோ கரும்புகளை சாய்த்து விடும்! சேட்டை விட்டால் தலைகளையும் தான்!

ஆனால் நடத்துனர் தியாகராயாவுக்கு இவற்றிலெல்லாமிருந்து ஒரு பெரிய விதிவிலக்கு அளிக்கப்பட்டருப்பது போலிருக்கும். அவர் அந்த நங்கையரோடு எதையும் கதைக்கலாம் எப்படியும் பகிடிபண்ணி சிரிக்கலாம் என்றிருக்கும்! இதற்கு அவரின் தொழில் வகிபாகமும். சேவையும். உதவியும் கனிவும் பணிவும் நிரம்பிய இனிமை பேச்சும். கலகலத்த சுபாவ குணமும் காரணமாகும்! இவைகளால் மட்டுமல்ல இவரின்தயவால் சில பலாபலன்களையும்பெற்றுவருவதாலோ. இவரின்வசீகரத்தோற்றத்தாலுமோ சரளமான பேச்சு வளமோ எல்லாமும் சேர்ந்தோ என்னவோ. அந்த பகுதி பணி நேரத்தில் கங்கைகரை மங்கையரின் புல்லாங்குழல் கண்ணன் போல் ஆகிடுவார் தியாகராயா!....... இவர் அப்போது அனுபவித்த இன்ப சுகத்தை இப்போதும் மீட்டிப் பார்க்கிறார் ஆசைப்பட்ட பெண்ணை மணமுடித்து எத்தனை முறை உறவு பூண்டாலும் கிடைக்காத இன்ப சுகம் அந்த எழில் மங்கையிடம் கிடைத்து வந்ததை இன்றும் நினைத்து புளகாங்கிதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகிறார் அவர்!.... காதல் உணர்வை தீர்க்கிறேன் என்று வெளியேற்றி விட்டு வெறுமையாய் விரக்தியாக வாழ்வதே கேவலம். அந்த மேலான உணர்வை வைத்துக் கொண்டு உறவாடுவதே காலமெல்லாம் இன்பம் பயக்கும் என்பதை இப்போதுதான் உணர்ந்து கொண்டார்! அப்போதே தெரியவில்லையே காலமெல்லாம் சுகந்த மணம் வீச வாழ்ந்திருக்கலாமே!... உணர்ச்சியை தீர்க்கப் பொய் குடும்பமாகி கடமைக்கு வாழ்வதாகி...

அந்த தொழில் எழில் நங்கையருக்கு அவர் செய்யும் உபகாரம் ஒன்றே ஒன்றுதான்!... அவர்கள் மாதச் சம்பளகாரர். எத்தனையோ கடைக்காரருக்கு கடன்காரருக்கு கடன்தீர்க்க வேண்டும். சம்பளப்பணம் அருகிப் போகும், சீவியப்பாடும் சிரமமாகும்! ஆகையால் கொண்டக்டர் ஐயாவின் தயவு வேண்டும். அதற்காக எத்தனை சிரிப்பு, கனிவு பணிவு குழைவு இனிமைப்பேச்சு!... இந்தளவும் தேவையில்லையே ஓரக்கண்ணால் பார்த்து ஒரு சொல்லுச் சொன்னாலே காணுமே அவர்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுவிடுமே!...... கையில் காசு இருக்காது ஆனால் அவர் 'டிக்கற்' போட்டு கொடுத்து விடுவார். தனது காசைப் போட்டு கட்டிவிடுவார். மாதச் சம்பள நாளில் அந்தக் கட்டணக் கடனைக் கொடுத்து விட்டே வாகனத்தில் ஏறுவர்! இந்த ஒழுங்கு முறை பிசகில்லாமல் நடக்கும். அவர்களின் நட்போ சினேகிதமோ பாலியல் தூண்டலோ சல்லாபமோ உல்லாசமோ காதலோ ஏதென்று அவர்களுக்கே தெரியாத உறவோ! யாருக்குத்தெரியும் ஆனால் ஒன்று அந்த உல்லாச சல்லாப உறவுக்கு பொருத்தமான சொல்லு இற்றைவரையில் இருப்பதாக அவருக்குத் தெரியவில்லை!

சாரதி நடுத்தரவயதை கடந்தவர். மிகவும் நல்லவராகவும் இருக்க வேண்டும். அவர் இதையெல்லாம் பெரிதுபடுத்தி அலட்டிக் கொள்வதில்லை! இளசுகள் வயதுக்கோளாறு என்று தனக்குள் சிரித்துக் கொண்டு தன் கடமையில் கண்ணாவார். நடத்துனரின் மணியோசைக்கு ஏற்ப நிறுத்துவார் ஓடுவார் அவ்வளவுதான்.

தியாகராயாவுக்கு பெண்களின் சிநேகம் மட்டுமல்ல ஆண்களின் நட்பும் தோழமையும் கிடைத்தே வந்தது இந்தச் சேவையால்:... அப்போதெல்லாம் திருமலை நகரில் தான் முக்கியமான ஸ்தலங்கள் யாவும் இருந்தே வந்தன. முக்கியமாக குடிவகை கடைகள் தவறணைகள் (பார்) இங்கே தான் கொலு விருந்தன! நகரை அண்டிய ஊர்களில் பட்டணங்களில் இவை இல்லாதிருந்தன. பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி வர்க்கம் அலுப்பு சலிப்புக்களை போக்கி மீண்டும் புத்துணர்ச்சி பெற 'அது' இல்லாதது பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனக்குறையாகவே இருந்தது. அதைப் பெறுவதில் மிகவும் சிரமமிருந்தது!.... இந்தக் குறைபாட்டைத் தீர்பப்பதில் சில சாராய வியாபாரிகள் ஈடுபட்டு இலாபம் பெறுவதாயினர். நகருக்குப் போய் பத்தோ பதினைந்தோ போத்தல்களை வாங்கி சாக்குகளில் வைக்கலுகளுக்குள் போட்டு மறைத்து அலுங்காமல் குலுங்காமல் பக்குவமாக கொண்டு வந்து இவரின் பேரூந்தைத்தான் எதிர்பார்த்துக் காத்திருப்பர்! பேரூந்து நிலையத்தில் இவரின் ஊர்தி வந்ததும். எல்லாமும் முகபாவனைகளால் நடந்தேறும். எல்லாமும் ஒளித்து மறைத்து வைக்கப்படும்! எந்தப் பிரச்சினையும் இருக்காது. நடத்துனர் உத்தரவாதம் பொடுத்து காப்பார் என்ற நம்பிக்கை அனைவருக்கும்!.... அவர்கள் சந்தோஷமாக காசு கொடுத்தால் இவர் வாங்கமாட்டார். ஆனால் ஒரு போத்தலை உவந்தளிப்பார்கள்: அதை வாங்கிக் கொள்வார் ஏனோ தெரியவில்லை!? அவருக்கு குடிப்பழக்கம் இல்லை. ஆனால் உள்ளக விலைக்கே கொடுத்தால் கும்பிடு போட்டு வாங்க எத்தனையோ பேர் இருக்கிறாங்கள்! காசாக்கிக் கொள்வார். இதை அவர்களுக்கும் அந்த ஊருக்கும் செய்யும் உபகாரமாக சேவயில் ஒன்றாக நினைத்தாரே அல்லாமல் பெருந்தவறேதும் இருந்ததாக அவருக்குத் தோன்றவே இல்லை! வேறு பொதிகள் பாரச்சுமைகளை சுமந்து வருகிறவர்கள் இ.போ.ச வையெ நாடுவார்கள். செலவு குறைவு ஏனபதால். இவர்களுக்கெலாம் முகம் சுழிக்காமல் ஒத்தாசையாயிருந்து கருமமாற்றுவார். அவர்களும் இவரது போக்குவரத்துச் சேவைக்காகவே காத்திருப்பார். இப்படியாக கடமையை சீறிச்சினந்து தொல்லையாகக் கருதாமல் சேவை மனப்பான்மையோடு சீராக கடமையாற்றி பலரது அன்பை சினேகத்தைப் பெற்று சுகந்தமாய் தொழிலாற்றி வரும் நாளில். இவரும் சம்மந்தப்பட்டோரும் மறக்கவொண்ணாச் சம்பவமொன்று நடந்தேறியது!....

அன்று கடைசிச் சேவை. கந்தளாயிலிருந்து புறப்பட்டு மீண்டும் திருகோணமலை நகரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது இந்தப் பேரூந்து. அன்று வழமைக்கு மாறாக பிரயாணிகள் அதிகரித்துக் காணப்பட்டனர். அன்று நல்ல நாளாம். நல்ல காரியங்கள் நடத்துவதற்கு ஏற்ற நாளாம். ..... திருமலை பேரூந்து நிலையத்தை வந்தடைந்து பிரயாணிகள் யாவரும் தங்கள் பைகள் பொதிகளோடு இறங்கி விட்ட பின்னர். எல்லோரும் இறங்கி விட்ட பின்னர் நடத்துனருக்கு இறுதியாக முக்கியமான பணி ஒன்று உள்ளது: வாகனத்தைப் பரிசோதனை செய்வது. மெல்ல மெல்ல அசைந்து நடந்து குனிந்து நிமிர்ந்து இருக்கைகளையும் அதன் அடியிலும் வழிவாக கைவைத்து ஆராய்வார். பிரயாணிகள் எதையாவது விட்டுச் சென்றிருக்கலாம். அடுத்தநாள் தேடிவருவர். அதை "பஸ் டிப்போவில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்படைத்திருப்பார். பெற்றுச் செல்வர். அனேகமாக இவரின் சோதனையின் போது கிடைப்பதெல்லாம் நொறுக்குத் தீன்பண்டங்களின் கழிவுகளும் எச்ச சொச்சங்களும் தான்! மூன்றோ நான்கோ சந்தர்ப்பங்களில் அடையாள அட்டை, வங்கிக் கணக்குப் புத்தகம், காசோலை என்று தவறவிட்டவர்கள் பதறிக்கொண்டு வருவார்கள். அவர்களுக்கு ஆறுதலளித்துள்ளார். சிலபோது சில சில்லறைத் தாள்கள் கண்ணில் படும். அவற்றுக்கு யாரும் உரிமை கோர மாட்டார். அவை இவரின் பைக்குள் போனாலும், பிச்சைக் காரருக்கோ கோவில் உண்டியலுக்கோதான் போய்ச்சேரும்!.... இறுதியாக "டிப்போ" வுக்கு கொண்டுபோய் ஒப்படைத்த பின்னர் அங்கிருக்கும் ஊழியர்களால் துப்பரவுப்பணி செய்யப்படும். சாரதியும் வாகனத்தில் உள்ள குறைபாட்டை சொல்லிவிட்டு செல்வார். திருத்த வேலைகள் நடக்கும். அடுத்தநாள் பிரயாணத்துக்கு ஏற்றவிதமாக இவர்களுக்காக ஆயத்தமாகி காத்திருக்கும் வாகனம்!

வழமை போல அன்றும் வாகனம் தன் சேவையை முடித்துக் கொண்டு நிலையத்தில் நிறுத்தப்பட்டதும் தியாகராயா தன் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். வழமை போல கழிவுகள் எச்சங்கள் மிச்சங்கள் அலட்சியமாக பார்வையிட்டுக் கொண்டு போகும்பொது, பின்னாசனத்தின் அடியில் கிடந்த ஒன்று இவர் கண்களை உறுத்தியது. மெல்லக் குனிந்து அதை எடுத்தார். சின்னதாக ஒரு தோல்ப்பை தான் அது. அழகாக இருந்தது. சிப்பை திறந்து பார்த்தார். இவர் கண்கள் கூசிவிட்டது. தங்க நகைகள் ஒளி வீசியது. ஒளிவீச்சின் தாக்கமோ தயக்கமோ இவர் "சிப்பை" இழுத்து மூடிக்கொண்டு கண்களையும் மூடிக்கொண்டார். மோனத் தவமியற்றும் முனிவர் போல. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல சாரதியிடம் வந்தார். அவர் இன்னும் தன் ஆசனத்தை விட்டு இறங்கவில்லை. பையை மெல்லத் திறந்து காட்டினார். அவர் அதை பார்த்த மாத்திரத்தில் இரு கரங்களாலும் முகத்தை மூடிக்கொண்டார். அதிக நேரம் நீடிக்கவில்லை. புன்னகையினூடே அவர் சொன்னார் "தியாகராயா, இது உனக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த விசயம் தான்! நாம்பங்கிட்டுக் கொண்டால் யாருக்கும் தெரியப்போவதில்லை.... எத்தனை பிரயாணிகள் வந்தார்கள் போனார்கள் ஆரார் கோண்டு போனார்களோ! எமக்கு எந்த முறைப்பாடும் குற்றச்சாட்டும் வரப்போவதில்லை! பகிர்ந்து கொள்ளலாம்!" வயது போனாலும் ஆசாரசீலரானாலும் பணமென்றால் பிணமும் வாய்திறக்கும் என்பது சரிதான்! என்றே தோன்றியது தியாகராயாவுக்கு. அவர் அலட்சியமாக இவரைப் பார்த்தார்..... அவர் கண் முன்னே நகையைப் பறிகொடுத்தவர்கள் படும் அவலக்காட்சிதான் விரிந்து நின்றது! அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரதியைப் பார்த்து தோழமையோடு சொன்னார்! "அண்ணே. ஆருக்கம் தெரியாமல் மூடிமறைத்தாலும், கடவுள் பார்த்துக்கொண்டுதான் இருப்பார். கூலி கொடுக்காமல் விடமாட்டார்! நாமேன் நமக்கும் நம் குடும்பத்துக்கும் வீண் பழியைத் தேடிக்கொள்ள வேண்டும்!" அவன் வாலிபன் இப்படிப் பேசியது அவர் நெஞ்சை சுட்டிருக்க வேண்டும். வியப்போடு அவனைப் பார்த்தார். திறுநீறு பூசிய நெற்றியை மெல்லத் தடவிக் கொண்டார்.

தியாகராயா "டிப்போ மனேய"ரிடம் இதை ஒப்படைத்து நடந்தததைக் கூறினான். அவரின் மனக்குரங்கும் ஆடியது போலும்! "ஏன் தம்பி இப்படிச் செய்யுறீர்! உமக்கென்ன விசரே? இவ்வளவு காலமா நேர்மையா தொழில் செய்து என்னத்தைக் கண்டம்? இதை ஏன் கடவுள் தந்த வரப்பிரசாதமாக கொள்ளக்கூடாது?.... இதற்கும் ஏளனப் புன்னகையே தியாகராயாவிடமிருந்து வந்தது. இவற்றை உரியவர்களிடம் சேர்ப்பத்தில் உறுதியாகவே இருந்தார்! யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

அவர் எதிர்பார்த்தது போல் நகையைப் பறிகொடுத்தவர்கள் பஸ்நிலையத்துக்கும் டிப்போவுக்குமாக வந்து முறையிட்டனர்! கதறிக் கண்ணீரும் விட்டனர்! "எங்கள் மகளை கலியாணம் செய்விக்க போனம் ஐயா, நகைய இந்த பஸ்சில தான் தவறவிட்டுற்றம் எண்டு எங்களுக்கு வடிவாத் தெரியுது! எடுத்திருந்தா எங்களுட்ட ஒப்படையுங்கோ ஐயா! உங்களுக்கு கோடி புண்ணியம் உண்டாகட்டும்! நகையில்லா விட்டல் கலியாணம் நிண்டு போயிடும்! ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில்லாமல் போயிடும்!" கண்ணீர் மல்க கதறினர்.

தியாகராயா அவர்களை அதிக நேரம் அழவிடவில்லை. நகைகளை உரியவரிடம் ஒப்படைத்து மனங்குளிரச் செய்தார். இதை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மகிழ்ச்சிப் பிரவாகத்தில் மிதந்தனர்!... ஒரு நகையை எடுத்து அவரிடம் நீட்டினர். மறுத்து விட்டார்! சில நோட்டுகளையும் உவந்தளித்தனர் வாங்கபில்லை!... சரி கலியாணத்துக்காவது வருமாறு வற்புத்தினர். இவர் சம்மதித்தார்...



கல்யாண விருந்தில் இவரே முக்கிய கதாநாயகனாக கவனிக்கப்பட்டார்!... நேர்மையொன்றே போதும் சுகசீவியம் கிடைக்கும். அதற்கு நானோ சாட்சி என்று இப்பவும் சொல்லிக்கொண்டிருப்பார்.

சூசை எட்வேட்
அன்புவழிபுரம், திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்திடும் தத்துவம்...

மனிதர் உணர்வை
மனிதர் நோக்கச் செய்தல்
பிழையன்றோ
மனிதர் வாட
மனிதர் வாளாதிருத்தல்
பிழையன்றோ

ஊனம் பார்த்து
ஈனம் செய்தல்
பிழையன்றோ
பலவீனங்கண்டு
பலமே கொள்ளல்
பிழையன்றோ

இளமைத் துடிப்பில்
முதுமை வேகச் செய்தல்
பிழையன்றோ
புதுமை எடுப்பில்
பழமை சாகச் செய்தல்
பிழையன்றோ





வீழ்ந்து கிடப்பவரை
எழுப்பி விடுதல் தானே
முறையாகும்.
ஆழ்ந்த துயரில் இருப்பவரை
ஆற்றி விடுதல்தானே
முறையாகும்.

மாளும் நோயில் துடிப்பவரை
வாழ வழி செய்தல் தானே
முறையாகும்.
ஆளும் இன்னல்களை உலகில்
ஆட்டம் காணச் செய்தல்தானே
முறையாகும்.

பாழ்பட்டோர் வாழ்வுக்காய்
தோள் கொடுத்தல் தானே
மாபெரும் தொண்டாகும் - இது
பள்ளமும் மேடும்
இல்லையெனச் செய்யுமன்றோ
இத்தரை மீது
வாழ்ந்திடும் தத்துவம் இதுவன்றோ!

எஸ்.ஆர். தனபாலசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறம்பட நூலகங்கள் செயற்படட்டும்...



கற்றலுக்கு கைகொடுப்பது
கல்விக் கூடம்
கசடறக் கற்றுயர மாணவரை
கல்வி மானாக்குவது ஆசிரியர்

வாசிக்க வாய்ப்பளிக்குமிடம்
வாசிக சாலையான பொது நூலகம்
காசில்லாதவரையும் இலவசமாய்
கற்பதற்கு வழிகாட்டுவது நூலகம்

தேசியச் சொத்து பொது நூலகம்
சிறந்த நூல்களிருக்குமிடம் நூலகம்
வாசிப்பை நேசிப்போர்க்கு நல்ல
வரப்பிரசாதம் பொது நூலகம்

போதிப் போரில்லாமலேயே சிறந்த
புத்திமானாய் வர வாசியான இடம் நூலகம்
சாதி மத பேதம் பாராசமத்துவ இடம் நூலகம்
சகலரும் படித்து பயன்பெறலாம் நூலகத்தில்

அறிவாலயக் கூடம் பொது நூலகம்
ஆயகலைகளையும் உள்ளடக்கும் அறிவகம்
நிறைந்த கல்விச் செல்வம் நூலகம்
திறம்பட நூலகங்கள் செயற்படட்டும்...



பல்கலை மாமணி
கலைமுத்து. கவிக்குயிலோன்
**கலாபூசணம் அ. அரசரெத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைதூரம்



நாங்கள் பயணித்த திசைகள்
வெட்டி வீழ்த்தப்பட்டு
எல்லைக் கோடுகள் கிழிபட்டு
தொடர்புகள் நீண்டு போய்
தொலைந்து போகின்றன

நாங்கள் பயணம் தொடர முடியாமல்
மெல்ல மெல்ல நடக்கிறோம்
ஏற்றிய தீபங்கள் அணைந்து போகிறது

வெளிச்சம் தரும் சூரியக்கதிர்கள்
ஆயிரம் சூரியர்களை
என் இதயத்தின் ஆழத்தில்
இருத்திவிட்டே செல்கிறது

மண்ணுலகம் விடியும்
விண்ணுலகம் மலர்தூவி வாழ்த்துக்கூறும்
மகிழ்ச்சி நிறைந்த மனம்
வாழ்வதற்கு மனிதக் கூடுகள் தேடும்

க. யோகானந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்போம் நேசிப்போம்

வீட்டிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலிலே

வாசிக்காமல் யார்க்கும்
வளர்வதில்லை அறிவு
இதனை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு

பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகங்கள்
அனைத்தையுமே நேசி

அடிமைகளின் சூரியனாம்
ஆபிரகாம் லிங்கனுமே
அமெரிக்க குடியரசு
தலைவனென்று
ஆக்கி உயர்த்தியதும் புத்தகமே

மாணவப் பருவத்திலே
பாட புத்தகங்களின் வாசிப்பு
சதத்தினையும் தொட வைக்கும்
வாசிப்பு சாதிக்க வழி வகுக்கும்

ஊருலகம் யாவும் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்தும் விளக்கும்
கற்றறிய குறுகிய காலம் போதும்

இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
கற்றறிய வழக்கமிருந்தால்
சுடர் விடும் உன் அறிவெப்போதும்

கற்பனை உலகிற்கே - நம்மை
இட்டுச் செல்லும் புத்தகங்கள்
மூளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்

நூலகங்கள் சென்றுவர
நாளும் நீ தவறிடாதே
நுண்மதி பெருக்கி வைக்கும்
நூல் கற்க மறந்திடாதே

புதுப்பித்துக் கொள்ள நீயும்
புத்தகம் வாசித்தே பழகு - உன்னை
புதுப்பிக்க புதுப்பிக்க
புறந்தள்ளாது இந்த உலகு

வாசிப்பை நாளும் நேசிப்பாய்
நல்ல நூலனைத்துமே சுவாசிப்பாய்
அறிவாளியாக்கும் உன்னை
அறிவாய்
அனைவர் மதித்திட நீ உயர்வாய்

**எச்.என்.எப். நஹ்லா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூத்துக் குலுங்கும் புன்னை

உயிர் ஒட்டம் நின்று விடும் இல்லை என்றால் சுவாசிப்பு
சுவாசிப்பு என்ற வார்த்தைக்குள்ளே அடங்குதையா வாசிப்பு
வாசிப்பு என்ற படகோட்டம் சென்று சேருமிடம் நேசிப்பு - உயர்
வாசிப்பை நீ நேசித்தால் உன்னைக் கட்டியணைக்கும் பூரிப்பு

நூலகத்தில் நீ அமர்ந்து படித்திட்டால் தலைகுனிந்து - முத்
தேவர் உலகும் உனைப் போற்ற உயர்ந்திடுவாய் தலை நிமிர்ந்து
'தன்வந்திரி' அறிவு தேடும் நோயாளிக்கு அருமருந்து - அந்த
'தன்வந்திரியே' நூலகம் என்றால் மறுப்பார் யார் வாய் திறந்து

வாசிப்பால் முழுமையடையும் மனிதனவன் உள்ளம் - அதன்
பூரிப்பால் பாய்ந்து வரும் அறிவு நதி வெள்ளம் - அள்ளக்
குறையாத அட்சய பாத்திரமே கல்விச் செல்வம் - தெவிட்டாத
அமிர்த செல்வம் அள்ளிப் பருக நாம் நூலகம் நோக்கிச் செல்வோம்

"போடுங்கள் ஐயா பிச்சை" என்று இருகரங்கள் நீட்டி - நீ
யாசித்தாலும் "கற்கைநன்றே" என்றால் ஔவைப் பாட்டி - ஔவைக்
கிழவியவள் கிளவி கொண்டு உன் அறிவைத் தீட்டி - அரங்கில் நீ
வெற்றிவாகை சூடிவிட்டால் எவர்தான் உனக்குப் போட்டி

நந்தவனப் பூங்காற்றுக்கு சொந்தம் நறுமண வாசனை - நீ
சுவைத்துச் சுவைத்து படிக்கப் படிக்க இனித்திடுமே வாசனை
வாசிப்பு என்னும் அடங்காப் பசிக்கு நூல் இனமே போஷணை - இந்த
உண்மை தெரிந்தும் நூலகம் செல்ல இன்னும் என்ன யோசனை?

கல்லாதோர் விழிபார்த்து ஒப்பிடுவார் புண்ணை - அறிஞர்
கற்றவர்தம் முகம் கண்டால் புகழ்ந்திடுவார் கண்ணை - தெய்வ
பொய்யாமொழி ஈரடியோ அதிரவைக்கும் விண்ணை - ஈரடியில்
நடந்து சென்றால் நம் வாழ்வில் பூத்துக் குலுங்கும் புன்னை

**க. மலர்ராஜன்**
சாம்பல்தீவு, திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு...

01. மனித நேயத்தினை மற்றவர்களிடம் தேடுவதை விட.
முதலில் உன்னுள்ளே தேடு.

02. நான் என்று சொல்வதை விடுத்து நாம் என்று சொல்.
புதுவித உணர்வுகள் உண்டாகும்.

03. மற்றவர்கள் மீது அன்பைக் காட்டு.
ஆனால் அடிமையாகி விடாதே.

04. வாழ்வில் இலக்கொன்றை தேடிச் செல்.
அப்போது வாழ்க்கை சுவாரசியமாய் அமையும்.

05. உறவுகளைப் பாதுகாத்துக் கொள்.

06. துன்பத்தைக் கண்டு ஓடாதே.
துன்பத்தை ஓடச் செய்.

07. மற்றவர்களை மகிழ்விப்பதற்காக அவர்களது.
குறைகளை கண்டு கொள்ளாமல் இருக்காதே.

08. நண்பனை நண்பனாகப் பார்ப்பதை விட.
துரோகியைக்கூட நண்பனாகப் பார்
வாழ்வே உன் பக்கம் தான்.

09. தோல்வியைக் கண்டு துவளாதே.
அதுவே வெற்றிக்கான பாதையாகும்.

10. உன்னை மற்றவர்கள் புரிந்து கொள்வதை விட.
முதலில் உன்னை நீயே புரிந்து கொள்.
அதுவே உனது வெற்றியின் அடையாளமாய் மாறும்.

**உ. ரஜனிகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை நூலகமே!

திருக்கோணமலை பூமியிலே பூத்தெழுந்த தாரகையோ!
வீறுநடை போட நினைத்து விழுந்தெழுந்த வைரவனோ!
வாட்டி வதைத்த காலம் முதல் வாடாமல் நிமிர்ந்து நின்று,
வாடுகின்ற நிலைமை கண்டால் நட்டுவைத்த வீரவனோ!

உனைக் கண்ட மனிதர்களோ! உதறி நின்ற காலம் அது
உன் சேவை கண்டு அவர்களெல்லாம் ஓடிவர காத்து நின்றார்
நீ கொடுத்த தண்டனையோ! பிரிந்து செல்ல வைத்ததடா?
புரியாத புதிர் கண்டு திண்டாடியோர் எத்தனை பேர்?

பகுதி பகுதியாய் பிரித்து வைத்து துயர் கொடுத்தாய் என்று எண்ணி
சமூகம் உன்னை தப்பான இடம் போட்ட காலமும் இருந்ததடா,
புரியாத மனிதனுக்கு பரிய வைத்து நீ கொடுத்தாய்
உன் மனம் நிறைந்த சேவையினை இரண்டாயிரத்து ஒன்பதினிலே,

ஆனி மாதமாம் ஆறாம் திகதியாம் நகராட்சிமன்றமே
விழித்தெழுந்த காட்சி அது,
அதன் அருகினிலே நீ அமர்ந்து அலங்கரித்த தருணமது,
தப்பான இடம் போட்டோர் கண்ணீர் வடித்தார்கள்,
உன்னை நன்றாக எண்ணியோர் வாழ்த்துச் சொன்னார்கள்

உன் புகழின் பலன்தான் இன்று எட்டாண்டையும் தாண்டி
தலைநிமிர்ந்து காட்சியளிக்கும் திருக்கோணமலை
நகராட்சி பொதுநூலகமே!
நீ மென்மேலும் வாழ வேண்டும் என வேண்டி நின்று,
இறைவனை இருகரம் ஏந்தி பிரார்த்திக்கிறேன் இம்மண்ணில்.

**மௌலவி. அ.ப.மு. அஸ்மி (ஜமாலி)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நான் கண்ட நூலகம்

காலங்கள் மாறினாலும் ஒருவர் கொண்ட
கோலங்கள் மாறாது என்ற எண்ணத்தை
மாற்றிய புதையல் ஒன்றைக் கண்டு
முற்றிலும் அதனில் அன்பு கொண்டேன்

கருவறையில் பத்து மாதம்
வகுப்பறையில் சிறிது காலம்
நூலகத்தில் வாழ்க்கைக் காலம்
ஞாலத்தில் அர்த்தமாடும் வாழ்வு

பதிவீட்டுத் தொழிலாளியாக வந்தேன்
புரியாத புதிராக நின்றேன்
கடலெனும் அறிவினைக் கண்டேன்
சரஸ்வதி கடாட்சம் பட்டு
பலரும் போற்றும் வண்ணம்
சுற்றமாய் இருப்பதில் என்னே இன்பம்

நூலகத்தில் உதித்தது வாசகர் வட்டம்
பல்திறனாளர் இணைந்திடும் கூட்டம்
நூலகம் அடைந்தது மாண்பு
சிறப்பான நூலக செயற்திட்டம்.



**திருமதி. சந்திரசேகரம் கமலேஸ்வரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரினில்...



பிஞ்சு உள்ளங்கள்
பஞ்சு மெத்தையில்
படுத்துறங்கும் வேளையிலும்
பல இடங்களில்
பாழாய்ப்போன பாவிகளின்
பாலியல் வன்கொடுமை.
பாடாய்ப்படுத்துகிறது இன்று
பச்சிளம் பாலகரும்...
பருவக் கன்னியரும்...
பாட்டிமாரும் கூட...
பாரினில் படும் பாடு...
பாவம் இப்பருவத்தினர்.
பலரும் ஒன்று சேர்ந்தால்
பாலியல் வன்கொடுமை என்ன
பாழ்பட்ட பலதையும் ஒழிக்கலாம்.



அலாவுடீன் A.L.A. பாபு
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மது ஒழிப்போம்
# மனித உயிர் காப்போம்...

தற்போது அதிகளவில் எமது காதிற்குள் நுழையும் விடயம் என்னவெனில் மது! மது! மது!...

இம்மதுவினால் பல தீமைகளிருப்பினும் எமது மக்கள் அதையே நாடுகின்றனர். மது ஒழிப்பு விழிப்புணர்வு சிறப்பாக நடைபெற்றாலும் மது அருந்துவதை நிறுத்தவில்லை. இம்மது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை குறைக்கிறது. மூளை மழுங்குகின்றது. சிறு மூளையில் மது தங்கி அதன் தசைகளின் செயற்பாட்டை பாதிக்கிறது. அது மட்டுமல்லாது கண் விழிக்கும் போது தலைவலி ஏற்படுகின்றது. கல்லீரல் செயலிழந்து போகின்றது. முக்கியமாக கணவன் மனைவி மற்றும் பிள்ளைகள் இடையே குடும்ப முரண்பாடு போன்றன ஏற்படுகின்றன. அன்பை கெடுக்கும் மது, மரியாதையை இழக்கச் செய்யும், மது குடும்பத்தை அழிக்கும் மது மனதை குழப்பும். மது பண்பை தொலைக்கும் மது என பலவற்றைக் கூறலாம். குடி குடியைக் கெடுக்கும் என்பது சான்றோர் வாக்கு! இவ்வாறு எம்மை அழிக்கும் மதுவை ஒழிப்போம்! எமது குடும்பம் திருந்தினால் கிராமம், நகரம், மாகாணம், நாடு என எமது உலகத்தையே அழிவிலிருந்து பாதுகாக்கலாம். மதுவில் தொடங்கி மாதுவில் தொடர்ந்து வாழ்வை மரணத்தில் முடிக்கும் உலகை வளமாக்க மதுவை ஒழிப்போம்! உயிர் காப்போம்!

**சிறிகாந்தன் மிஷேல் டிஷானா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வு



வாழ்வில் என்றுமே இல்லாதவாறு
ஓர் அடகுக்கடை
மனநிலை என்னை
ஆக்கிரமித்தது
திடீரென என்
மனப்பெட்டகத்தை
திறக்கிறேன்
சீராக அடுக்கப்பட்ட
கோப்புக்கள்
நிரல் நிரலாக
நெஞ்சமெல்லாம்
நிரம்பி இருக்கிறது
சேமிப்பு கணக்கை
திறந்து பார்க்கிறேன்
சேமிக்கப்பட்டவை எல்லாவற்றையும்
ஒவ்வொன்றாக
வரிசைப்படுத்துகிறேன்
என்னுடைய கோப்புகள்
எங்கிருக்கிருக்குமோ?
அங்கிருக்கும் என் வாழ்வு.



**இரவிகாந்தன்**
திருகோணமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

தாயிற்கு நிகரான மொழியாம்
நம் தமிழ் மொழி
அது பழைமை செம்மொழியான
நம் தமிழ் மொழி

ஐம்பெரும் காப்பியத்தையும்
முதல், இடை, கடை சங்கங்களையும்
நாற்றிசை எங்கும் போற்றிடவே
வீற்றிருக்கும் தாய்மொழியே தமிழ் மொழி



சேர சோழ பாண்டிய
மூவேந்தர் போற்றும்
கல் தோன்றி மண் தோன்றும்
காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழே

பொதிகை மலையிலே பிறந்து
வைகைக் கரையில் தவழ்ந்து
பல்வேறு மன்னர்களாலும் சங்கங்களாலும்
வளர்க்க பட்டவள் தமிழ்த்தாய்

குன்றாத இளமையும் குறையாத அழகும்
மங்காத மாண்புடைய இலட்சிய தேவியே தமிழ்த்தாய்
அழியாப் பெருமையும் அழியாப் புகழும்
அரிய கருத்தும் கொண்டதே தமிழ்மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமுடியில் தொல் காப்பியமும்
காலில் சிலம்பாக சிலப்பதிகாரமும்
அணிகின்ற முத்துமாலையாய் எட்டுத் தொகையும்
திருக்கரங்களில் வளையாபதியும்

குண்டலகேசியினை செவிகளிலும் கொண்டுள்ளவளின்
கையினில் ஆட்சி செய்யும் செங்கோலின் திருக்குறளும்
யாதும் ஊரே யாவரும் கேளீர் ஏம்
பண்பினை உலகுக்கு தந்தவள் தமிழ்த்தாய்

பௌத்தரும் - சமணரும் படித்துச்
சுவைத்த பைந்தமிழ்
சைவரும் - வைஸ்ணவரும் பருகிக்
களித்த செந்தமிழ்

கிறிஸ்தவரும் - இஸ்லாமியரும் தேடி
அரவணைத்த முத்தமிழ்
ஐரோப்பியரும் - அந்நியரும் தேடி
படித்த செந்தமிழாம் நம் தமிழ் மொழி

நம் தாய்க்கு நிகரானதும்
நம் உயிருக்கு மேலானதும்
எட்டுத்திக்கும் தித்திக்கும் தீந்தமிழ்
தெவிட்டாத நம் தாய்மொழியான தமிழ் மொழி.

கு. தேனுஷா
ஆனந்தபுரி,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாவும் இல்லறப் பெண்களும்

இல்லறத்தில் இருக்கும் பெண்கள் யோகாசனம் பயிலலாமா என்ற கேள்வி எழுகிறது. யோகாசனத்தின் முழுப்பயனையும் பெறவேண்டிய நிலையில் இருப்பவர்கள் அவர்களே என்பதை புரிய வைக்க வேண்டும்.

உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆண்களைக் காட்டிலும் அவர்களே அதிகமாக ஆளாகுகிறார்கள். எனவே அவர்கள்தான் யோகக்கலையைப் பயில்வதில் முன்நிற்க வேண்டும்.

ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு உடலில் 17 சதவிகிதம் கொழுப்பு சக்தி கூடுதலாக உள்ளதால் தான் பெண்கள் உடல் விரைவில் பருத்து பூதாகரமாகி விடுகிறது.

பெண்களுக்கு பெண்மையும் நளினமும் மிளிரச் செய்வது பிராணாயாமம், யோகாசனம், தியானம் ஆகியவை ஆகும். பிராணாயாமத்தினால் கண்கள் பளிங்குபோல் ஒளி பெற்று முகம் தேஜசுடன் விளங்கும். இவ்வித மூச்சுப் பயிற்சியினால் கவர்ச்சியான மார்பகமும், ஆரோக்கியமும், புத்தி கூர்மையும், மனதில் சாந்தமும் ஏற்படும்.

உடற்பயிற்சியை மணிக்கணக்கில் செய்ய வேண்டும். ஆனால் யோகப் பயிற்சியினை பதினைந்து நிமிடங்கள் செய்தால் கூட பலன்தரும். உடற்பயிற்சிக்கு வயது வரம்புண்டு. ஆனால் யோகப் பயிற்சிக்கு வயது வரம்பு இல்லை.

பெண்களின் வாழ்க்கையில் முதலில் அடையும் பருவம் பூப்பெய்துவது ஆகும். இப்பருவமடைதல் என்பது சாதாரணமாக பதினான்கு வயது முதல் துவங்குகிறது. ஒரு சிலருக்கு சிறிய வயதிலேயே ஏற்பட்டு விடுவதும் சாதாரணமாகவே நிகழ்ந்துவிடக் கூடியதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு மாற்றங்களாலும் உடலில் ஏற்படும் நோய்த்தாக்கம் காரணமாகவும் சிலருக்கு குறிப்பிட்ட வயது ஆகியும் பருவமடையாத நிலை ஏற்படலாம்.

காலம் கடந்தும் பூப்படையாத பெண்கள் முறையான உணவு மூலமும் யோகப் பயிற்சியின் மூலமும் உடலின் உள் உறுப்புகள் நன்கு செம்மைப்பட்டு பருவமடையலாம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

மாதவிலக்கு காலத்தில் சுறுசுறுப்பற்ற தன்மை, அடிவயிற்று வலி, பசியாமை, வாந்தியெடுப்பது போன்ற குறைபாடுகளை யோகப் பயிற்சியினால் குணப்படுத்தலாம். மாதவிலக்கு ஆன ஏழாம் நாளிலிருந்து யோகப் பயிற்சி செய்தால் இக்குறைபாடுகள் நீங்கும்.

சாதாரணமாக பருவமடைந்த பெண்கள் தினமும் குறிப்பிட்ட ஆசனங்கள் செய்து வந்தால் கருவை ஏற்கும் திறனும், நரம்பு பலமும் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஏற்கக்கூடிய மனத்திறனும் கிட்டும்.

இவ்வித குறிப்பிட்ட ஆசனங்கள் பருவமடைந்த நாள் முதல் தவறாமல் செய்து வந்தால் திருமண உறவிற்கு பிறகு உடனே கருத்தரித்து நன்மகவைப் பெற்றெடுக்க முடியும். பிரசவமும் எளிதாக இருக்கும்.

முறையான யோகாசனங்களைப் பெண்கள் பயின்று வந்தால் சுகப் பிரசவம் மட்டுமின்றி கருச்சிதைவு ஏற்படுவதைத் தடுக்க முடியும். குழந்தை வேண்டாம் என்பவர்கள் மாத்திரைகளை நாட வேண்டியதில்லை. கருத்தடை சாதனமாக சில உரிய யோகாசனங்களைப் பயின்று இல்லற வாழ்க்கையில் எவ்வித பயமுமின்றி உல்லாசமாக இன்புற்றுக்களிக்கலாம்.

சில பெண்கள் கெட்ட பழக்கவழக்கங்களினாலும் உணவு முறையாலும் கருவைத் தாங்கும் சக்தியை இழந்த நிலையில் உள்ளார்கள்.

இதனால் அவர்கள் கர்ப்பம் அடைய முடியாத நிலையில் அல்லலுறுகிறார்கள். அவர்கள் யோகப் பயிற்சியின் பால் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால் கரு உற்பத்தியாகவும், அது வளர்ந்து சுகப்பிரசவம் ஏற்படவும் வழியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்ப்பிணிப் பெண்கள் உரிய பயிற்சியாளர் முன்னிலையில் அவரது ஆலோசனைப்படிதான் யோகாசனங்களை செய்ய வேண்டும்.

சுவாசத்தை முறையாக உள்ளிழுத்துப் பழகினால் கர்ப்ப காலத்திலும் சரி பிரசவ காலத்திலும் சரி உடல் உபாதையின்றி வலியின்றி பிரசவம் அடைய முடியும். நாடி சுத்தியை நாளும் பழகி வந்தால் நாடிகளும் இரத்தமும் சுத்தமடைந்து. பிரசவம் எளிதாகும். மேலும் மனம் ஒருமுகப்படுத்தப்பட்டு இரத்த நாளங்களின் பாதைகள் தூய்மைப்படுத்தப்படுகின்றன.

கர்பிணிப் பெண்கள் மாதவிலக்கு நின்றவுடன் உட்டியானா. நௌலி போன்ற ஆசனங்களை நிறுத்திவிட வேண்டும்.

மூன்றாம் மாதம் தனுராசனம். யோக முத்ராவை நிறுத்த வேண்டும். ஆறாம் மாதம் முதல் சிரசாசனம் பச்சிமோஸ்சதாசனம். அர்த்த ஹலாசனம். ஹலாசனம் போன்றவற்றை நிறுத்திவிட வேண்டும். எட்டாம் மாதத்தில் சர்வாங்காசனம் செய்யக்கூடாது.

ஒன்பதாம் மாதத்தில் பத்மாசனத்தை நிறுதிவிட்டு பிரசவ காலத்தின் கடைசி நிமிடம் வரை நாடிசுத்தி எனும் சுவாசப் பயிற்சியை செய்து வரலாம்.

பெண்களை அதிகமாகத் தாக்குகின்ற மார்பகப் புற்றுநோயை முறையான சுவாசப் பயிற்சி. எளிய ஆசனப் பயிற்சி மூலம் நிவர்த்தி செய்யலாம். சாதாரணமாக நோயின் தாக்கத்திற்கு ஏற்ப தாய்மார்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் குடும்ப வாழ்க்கை நெறி. உணவு மற்றும் ஜீரணக் கோளாறுகள். குடும்பத்தில் ஏற்படும் மனக்கசப்பு. வெறுப்பு போன்றவற்றால் ஏற்படுகிறது. இதனை தக்க யோகாசன மார்க்கமாக நீக்க முடியும்.

பெண்களுக்கு ஏற்படும் இடுப்பு வலி. முதுகுவலி போன்றவை எலும்பில் உள்ள திரவம் குறைவதால் உண்டாகிறது. இதனை விபரீதகரணி. சர்வாங்காசனம். பவன முக்தாசனம் போன்ற ஆசனங்கள் மூலம் குணப்படுத்தலாம்.

சில தாய்மார்கள் தாய்ப்பால் சுரக்காது அவதிப்படுவதுண்டு. பிட்யூட்டரி சுரக்கும் ஹார்மோன் சரிவர சுரக்காததுதான் தாய்ப்பால் சுரக்காததற்கு காரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசில் உள்ள பிட்யூட்டரி கோணத்தை சீர்திருத்த விபரீதகரணி, சவாசனம், நாடிசுத்தி ஆகியவற்றை பிரசவமான மூன்று வாரமானதும் தினமும் செய் வேண்டும்.

அதிகக் குழந்தைப் பேற்றாலும் ஹார்மோன்கள் குறைவினாலும் அடிவயிற்றுத் தசைகளின் தளர்ச்சினாலும் கருப்பை இறக்கம் என்ற நோயால் பல பெண்கள் அவதிக்குள்ளாகிறார்கள். இதனையும் ஈடு செய்து குணப்படுத்தி நரம்பை வலிமையுடையதாக்க யோகாசனங்கள் நிறைய உண்டு.

தனுராசனமானது பெண்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும் வலிமையையும் சேர்க்கவல்லதாகும். மாதவிடாய் வயிற்றுக் கோளாறுகளை இந்த ஆசனம் நீக்கும்.

அட்ரீனல் நாளத்தை நன்கு இயக்கி உடல் முழுவதும் சுறுசுறுப்படையச் செய்யும். கணையம், சிறுநீரகம் பெண்களுடைய சூலகம் ஆகியவற்றை சுறுசுறுப்படையச் செய்து அதனால் பலம் பெற்று இளமை உண்டாகும்.

சிரசாசனம் பெண்களுக்கு மிருதுவான முகத்தசைவுகள் பெறவும், இனிமையான குரலினைப் பெறவும் உதவுகிறது.

சிரசாசனம் பாலின சுரப்பிகளையும் தைராய்டு சுரப்பியையும் வலுப்படுத்துகிறது. பச்சிமோத்தாசனம் பெண்களுக்கு மாதவிலக்கின்போது ஏற்படும் வலி நீக்க சிறந்த ஆசனம்.

ஹலாசனம் பெண்களுக்கு இளமையைத் தரும் ஆசனமாகும்.

அழகாகத் தோற்றமளிக்க பாதஹஸ்தாசனம் பெண்களுக்கு உதவுகிறது. சலபாசனம் செய்வதால் வயிறு, இடுப்பு, தொடைகளில் அதிகப்படியான சதை போடாமல் உடம்பு கட்டாக இருக்கும்.

சுகப்பிரசவம் ஏற்பட பெண்களுக்கு புஜங்காசனம் பயன்படுகிறது. அண்ட கோசம், கருப்பைக் கோளாறுகள் நீங்கவும் துணை செய்யும்.



**குகதாஸ் ராம்கிஷன்**
ஓகக்கலை பள்ளியின் தலைவர் மற்றும் பிரதம ஆசிரியர்
சர்வதேச யோகா சம்மேளனத்தின் இலங்கைக்கான செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நூலகம் - நகராட்சி மன்றம்
# திருகோணமலை



திரு. வெ. இராஜசேகர்
செயலாளர்
நகராட்சி மன்றம்



திரு. என். பரமேஸ்வரன்
நிர்வாக உத்தியோகத்தர்



திரு. எஸ். முரளிதரன்
சனசமூக உத்தியோகத்தர்



திரு. ந. யோகேஸ்வரன்
பிரதம நூலகர்



திருமதி. மு.லெ. றிம்சானா
நூலகர்




திரு. உ. ரஜனிகாந்தன்
நூலக உதவியாளர்



திரு. பா. விபூஷிதன்
நூலக உதவியாளர்



திரு. அ. அச்சுதன்
நூலக உதவியாளர்



திரு. வ. பாலச்சந்திரன்
நூலக சேவகா



திருமதி. ஸ்ரீ. பிரியதர்சினி
நூலக சேவகா



திருமதி. ச. கமலேஸ்வரி



ஜனாப். அ.ப.மு. அஸ்மி



திருமதி. க. ஏஞ்சலா



திரு. ஆர்.பி.ஏ. டில்சான்



திருமதி. லி. ஆனந்தி

9773030720002
NLSL
ISSN 3030-7201



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org